உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰௪ { வெகுதானிய, தை } மலர் ௰


க. உயர்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார் "குருபக்தி" என்ற பொருள்பற்றிப் பேசியதன் சுருக்கம் 361

உ. திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "தமிழ்மொழியும் கவிஞர்பெருமையும்" என்ற பொருள்பற்றிப் பேசியதன் சுருக்கம் 369

௩. திருக்குறளும் உபநிஷதங்களும் 379
*திரு. ந. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் M.R.A.S.*

௪. வள்ளல் மலையமான் திருமுடிக் காரி 388
*திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்*

ரு. புதுவீடு புகுதல் 395
*திரு. கு. நா. சுந்தரேசன் அவர்கள்*

சு. புத்தக மதிப்புரை 396, 400

எ. விண்ணப்பம் 397

அ. தமிழ்ச்செய்திகள் 398
*பொழிற்றொண்டர்*



*செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,*

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.


*கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.*

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௰௪ | வெகுதானிய, தை | மலர் ௰ |
| --- | --- | --- |

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

**1938**-ஆம் ஆண்டு, ஏப்ரல் **23, 24**-ஆம் நாட்களில் கரந்தைத் தமிழ்ப்பெருமன்றத்தில் திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத் தலைவர், உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார் 'குருபக்தி' என்ற பொருள் பற்றிப் பேசியதன் சுருக்கம் :—

*மக்களாகப் பிறந்த நாம் முதன் முதலிற் பெறவேண்டுவது கல்வி. பின், பொருளைப் பெறவேண்டும். பொருளால் உலகவின்பம் நுகர்தற்குரியது. உயிர்களெல்லாம் இன்பக் குறையுடையனவாகவே காணப்பெறுகின்றன. மக்கள் தங்களுக்கேற்படும் இன்பத் தடைகளையுணர்ந்து அத்தடையொன்றுமிலா துயர்ந்த இன்பமொன்றுண்டென வுணர்தல்வேண்டும். தடையிலா வின்பந்தரும் மேலான பேரின்பத்தை யுணர்ந்தவன், அறம், பொருள், இன்பம் என்னுமிவற்றைவிட்டு, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய வீட்டையும் குறிக்கோள்*

பெறுகிறுன். குறிக்கோள் கொண்டவனே துன்ப நீக்கம் பெறுகிறுன். புருடார்த்தம் மூன்றையும் உடலோடு அநுப வித்தல் சீவன்முத்தி. உடலைவிட்டநுபவித்தல் விதேகமுத்தி. மூன்றும் மக்களானநுபவித்தற்குரிய இழிந்த பொருள்கள். நிறைந்த நிலைத்த தூயவின்பினை அடைதற்குரியவர்கள். யாவரும் வீடடைதற்கு முயலல் வேண்டும். அவ்வீடடைதற் குரிய வழியை விசாரித்தல்வேண்டும். அத்தகைய விசாரணைக்குப் பெரியோர் கருத்தைத் தொடர்தல் எளிது. பெரியோர் அப்பொருளைப் பெறுதற்கு மூன்று வழிகளைக் கண்டுள்ளார்கள். அவற்றுள் முதலாவது நூலாராய்ச்சியாம். சாத்திரமின்னதென்பதனை யுணர்ந்து அதன்கண் நுழைப வனுக்கு ஐயம்பல நிகழும். நடக்க நடக்கக் கால்வலி அதிகப்படுதல்போல அதிகம் படிக்கப் படிக்க அதிகப் படியான ஐயங்கள் தோன்றும். "அறிதோறறியாமை கண்டற் றுல்" என்றுர் நாயனுரும். எத்தனை நூல் படித்தாலும் ஐயம் முழுதும் நீங்கி விடுவதில்லை. கல்வியென்னும் பல்கடற்பிழைத் தும் என்றபடி நூற்கருத்தை யுண்ணத் தாகம் பெருகும். கடல் நீர் அருக்கனுணர்வால் மழையாகப் பயன்படுமாறுபோல ஆச் சாரியார்கள் நூற்கடல் பருகி நமக்களிக்கும் அறிவு மழைகள் நமக்குப் பயன்படுகின்றன. ஆகையால் அத்தகைய அறிவு நூல்களை அநுபவ வாயிலாகக் கற்றுணர்ந்து அவற்றைப் பிற மக்களுக்குத் தெளிய வுணர்த்தும் குருவின் உபதேசம் இன்றி யமையாத வழிமுறையாக வேண்டப்படுகின்றது.

குருவின் அருள் பெற்றவன் மூன்றுவதாக அவர் உப தேசித்தவற்றைத் தன்னுள் தியானித்துணர்ந்து ஆத்மாநுபவம் பெறுதல்வேண்டும். குருவுபதேசம், ஆத்மநிச்சயம், ஆத்மாநு பவம் இம்மூன்றும் பெற்றவனே முத்தன், கட்டற்று வீடு பெற்றவன். எவ்வளவு நூல்களிருந்தாலும் இவன் ஐயம் நீங்காது தவிக்கிற காலத்திலே குரு வந்துதான் நூலை விளக்குவதற்கும், ஆத்மாநுபவம் பெறுவதற்கும் காரணமாக விருக்கிறுன். ஆதலினுலே குருபத்தி இன்றியமையாதது.

வீட்டு நிலையிற் கருத்துவைக்கும் எப்பதம் பெரியோர் வாய் மொழியாக வருகின்றதோ அஃது எடுத்தாளுதற்குரியது. **குருபக்தி** என்ற இச்சொல் இதற்குமுன் பெரியோர்களாற் பேசப் பட்டிருக்கிறதா என்று ஆராயவேண்டும். இவ்விரு பதங்களும் கைவல்லியோபநிடத்தில் பேசப் பட்டிருக்கின்றன.

தேகம், ஆசனம், தூய்மை, கழுத்து தலை நேர் நிற்றல், இந்திரிய அடக்கம் இவற்ருேடு தியானத்திற்குப் போகும்போது, முதலில் முத்திக்குக் காரணமாகிய குருபத்தி அவசியம் என்பது கூறப்பட்டுள்ளது.

## குருவென்பதன் பொருள்

கௌரவமாயிருத்தலினுலேதான் ஆசாரியார் குருவெனப் படுகிறுர். குரு—பெரிது. கௌரவம் — குருவின் சம்பந்தம். இப்பொருளுணராதிருத்தல் ஓடுறமருந்த பின் றுறங்கல் போலும். இக்காலத்து இச்சொல் பொருத்தமில்லாத பொருளிற் பயிலப்படுகிறது. ஆசாரியன் என்பதற்கு மூன்று பொருள்.

1. சாத்திரப் பொருளை மனத்தில் தொகுத்துவைத்துள்ளவன். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிலைத்து நினைத்திருத்தல் முதற் கௌரவமாகும்.

2. தான் கற்றபடி நடப்பவனே ஆசாரியான்.

3. தான் கொண்ட உறுதியான ஒழுக்கத்தின்கண் மாணவர்களை நிறுத்திவைப்பவனே ஆசாரியன். கலையினுல் இயமமாதிகளால் வீடடைய நாட்டம் வைத்துத் தன்ஞற்றலினுலே தகுதியை மாணவனுக்கு ஏற்படுத்தல் வேண்டும்.

ஒருசொல்லிற்குப் பொருள் கூறும் பொழுது அசனேடொரு பொருளுடைய பிற சொல்லொன்றை யெடுத்துரைப்பதும் அச்சொல்லின் பொருளைச் சொற்ருெடரால் விரித்துக் காட்டுதலும் அச்சொல்லின் எழுத்துக்களைப் பிரித்துரைபபதும் என மூன்றுவகையாற் கூறப்படும். அவ்வாறு குரு என்றதன் எழுத்தைப் பிரித்துரைக்குங்கால், கு—அந்தகாரம் (இருள், அஞ்ஞானம்) எனும் பொருள் தரும். ரு — ஒளியெனப் பொருள்படும். இருள் தன்னைக் காட்டிப் பொருளை மறைப்பது. பொருளை மறைத்துத் தன்னையும் மறைப்பது அஞ்ஞானமாதலின் அவ்விருளினும் மிகக் கொடியதாம். உயிருக்குப் புறவிருளை யோட்டி யொளியைத் தருங் கதிரவனைப்போல் அகவிருளை யோட்டி ஒளியைக் கொடுப்பவனே குருவாவான். தாய்மொழி, வட மொழி, பிராகிருதம் ஆகிய இவற்றினுல், மற்ற அளவைகளாலறியப்படாது, நூலால் மட்டும் அடையப்படும்

பொருளை வந்த மாணவர்தம் அறிவுக் கேற்றபடி ஐயமறப் புகட்டுவனே குருவாவான். இவ்வுண்மை,

"பாசத்தைநீக்கிப் பரனொடு தன்னையும்
நேசத்துநாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குருவா வார்" (திருமந்திரம்)

என்பதனாலும்,

"குருவென்பவனே வேதாகமங்கூறும்
.............................................
வரும் நல்லுயிர் பரன்பால் வைக்கும் மன்னன்"

என்பதனாலும்

"வேதவாகமச் சென்னியில் விளைபொருள் அபேதம்
பேதமாகிய பிணக்கறுத்து இருள்பிணியவிழ்த்து
நாதனாகிய தன்னையு மென்னையும் நல்கும்
போதனாகிய குருபரன் வருவதெப்பொழுது"

என்பதனாலும் விளங்கும். மூக்கைக் கருவியாகக்கொண்டு தேனிரம்பு மலரை அளி தேடுவதுபோல் ஆசாரியனைச் சுற்றி வந்து தோத்தரித்து அவன் உபதேசத்தால் வரும் ஞானத் தேனையுண்டு ஞானநுபவம் பெற்று இன்புறுவதே நல்லுயி ரென்று சொல்லப்படும்.

## குருவினுடைய அவசியம்

தனக்கு ஐயம் வந்தவிடத்துப் பிறரை நாடுகிறார்கள். எல்லாமறிந்தவர்களில்லை. தனக்குப் பயிற்சியில்லாத பொருளில் பயிற்சி பெற்றவனை யடைதல் அவசியம். ஒருவனுடைய பொருளறிவிற்குக் காட்சி, அனுமானம், பெரியோர்வாயிலிருந்து வருவதாகிய ஆகமம் ஆகிய மூன்றுஞ் சிறந்தன. தான் அநுபவித்துணர்ந்த பொருளை நம்மனோர்க் கறிவுறுப்பவனே ஆசிரியன். காட்சியென்பது ஐம்பொறியுணர்வாலறியப்படுவது. ஆப்தனுடைய வாக்கிலிருந்து வருவதே ஆகமம். அப்பாற் பட்ட பொருளைத் தான் முயன்று நமக்கு அறிவுறுப்பவனவனே. உள்ளிருக்குமிறைவனே லிங்கம், அடியார், குருவடிவம் என மூன்றுருவாக வெளிவந்து குருவாக நடத்த இலக்கணம், உயிரிலக்கணம் ஆகியவற்றை யுபதேசித்து அருளுவான்.

## குருவாக வருபவர் யார் ?

நம்மைவிட அறிவுமிக்குள்ளவரே குருவாவார். அவ்வறிவு உலகவறிவினைச் சுட்டாது. அது விடுபட்ட நிலையில் நமக்கு ஞானத்தை யறிவுறுத்த வருபவன் பசுவாகமாட்டான். எல்லாந் தெரிந்தவனே குருவாய் வருவான். அனுதிமலபந்த மற்று மங்கல குணங்கள் நிறையப் பெற்றவனே அவன்.

"நிறைமலம் அனுதியின் நீங்கிநிற்றலின்
குறைவிலா மங்கல குணத்த னுதலின்
அறைகுவர் சிவன் என அறிவின் மேலவர்"

என்பர் சிவஞானமுனிவரும்

சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றை முடித்த பக்குவமுடையவுயிர்களுக்கு உள்ளிருந்து மன்னுமருட் குருவாகி வெளிப்பட்டுவந்து தவத்தினில் உபதேசித்தருள் செய்வர். 'தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்த' என்பது சிவஞான போதம்.

கடவுள் ஒருமலமுடையார்க்கு உண்ணின்றுணர்த்தியும் இருமலமுடையார்க்கு முன்னின்றுணர்த்தியும் மும்மலமுடைய நம்போன்ற சகலருக்குப் படர்க்கையில் நின்றுணர்த்தியும் மூவகையால் அருள்புரிவர். ஆவேசித்து நின்றும் அதிட்டித்து நின்றும் அருள் செய்புமிடமே குருநிலையாம். ஆவேசமாவது உள்நுழைந்து அருள்செய்தல். அதிட்டானமாவது அதன்கண் நிலைத்து நிற்றல். கடவுளே குருவாக வருவார் என்னுமிவ் வுண்மையினைச் சைவசமயத்தரேயன்றி,

"பீதகவாடைப்பிரானுர் குருவாகிவந்து" என வைணவரும் ஏற்றுப் போற்றியுள்ளார்கள்.

## குருவினுலடையும் பயன்

துன்பந்தருவனவாய யான், எனது என்னும் அகப்பற்று புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றினையும் நீக்கிக்கொள்ள வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவரும், "யானென தென்னுஞ் செருக் கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம் புகும்" எனத் தெளிய வுரைத்தார். பழைய வழக்கத்திலே பெரியோர் தம்மை அடியேன் என்றுங்கு தாழ்த்திக் கூறுதற்கு நான், எனது என்ற சொற்களைக்கூட வழங்குதல் கூடாதென்ற நன்னோக்கமே பொருந்திய காரணமாகும்.

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்" என்றார் கம்பரும்,

"ஊன் செய்யா ஞானந்தானுதிப் பினல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியாதே"

எனவரும் சித்தியாரும் இவ்விருவகைப் பற்றையும் ஒழிப்பதற்கு உண்மை ஞானம் வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. ஆகவே, உபதேசத்தால் மெய்ம்மையுணர்ந்து இப்பற்றையொழித்தலே குருவினால் வரும் பயனாம். குரு பல கண்ணால் நோக்குதல் தலையைக் கையாற்றொடுதல் முதலிய வகையானும் மாணவனது பாசத்தைக் களைகின்றார். இது "பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும்" என்பதனு லுணர்த்தப்பட்டது. ஆசாரியன் தலையிற் கை வைத்தால் யான், என தென்பன வொழியும், அவன் தலையிற் கையை வைத்தான் என்ற சொல்லும் அவனைப் பற்றறச் செய்தான் என்ற பொருளிலேயே வழங்குகின்றது. குமரகுருபர அடிகளார் தாம் பாடிய பண்டார மும்மணிக்கோவையில் தாம் குருவினிடம் போம்பொழுது சீவனாகச் சென்றும் மீண்டு திரும்பி வரும்பொழுது தாம் ஒரு மாத்திரை குறையப்பெற்று நட்டமடைந்ததாகவும் கூறியுள்ளார். இதன் கருத்து சீவனாகச் சென்ற அவர் குருவினருளால் சீவபோதங் கெட்டுச் சிவபோதம் பெற்றாராதலின் சீவன் என்ற அச்சொல்லின் இரண்டு மாத்திரையுடைய சீ என்னும் நெட்டெழுத்து ஒரு மாத்திரை குறைந்து சிவன் என்னும் நிலையில் அவர் குருவருள் பெற்றாரென்பதனையே வலியுறுத்துவதாகும்.

யானெனதென் றற்ற இடமே திருவடியாம் என்ற தொடரும் யானென தென்னுமிப் பற்றொழிந்த போதே சிவத்துவம் வருமென்பதனை விளக்குகின்றது.

மீன் தன் கண்களால் நோக்கித் தன் முட்டையை வளர்த்தல்போல ஆசிரியனும் மாணவர்க்கு நயனதீக்கையையும், ஆமை தன் நெஞ்சால் நினைத்துத் தன் முட்டையை வளர்த்தல் போல மாணவர்களுக்கு மானசிகதீக்கையையும், கோழிமுட்டைகளை அடைகாத்து வளர்ப்பதுபோல மாணவர்க்குப் பரிச தீக்கையையும், சிப்பியில் விழுந்த மழைத்துளி முத்தாவது போலத் தாம் சொல்லும் உபதேசம் உருவுற்று வளரும் பக்குவமுடைய மாணவர்க்கு வாசகத் தீக்கையையும், மாணவரின் மனம் விரிந்து உலகையறியவும் குவிந்து தன்னையறியவும், விசாரம் செய்யும் சாத்திர தீக்கையையும், பாகன் காட்டில்

சிற்றுணவு கொள்ளும் யானையைத் தானே தேடி வந்து தான் பழக்கிய யானைகளைக் கொண்டும் அது தெரியாதபடி குழியினை வெட்டிப்பிடித்தும் அதன் மும்மதத்தை யடக்கி அதனை மந்திர மொழியால் வசப்படுத்தி நெய், அரிசி, வெல்லம் முதலிய உயர்ந்த உணவுப்பொருள்களை யளித்துக் காத்து வருதல்போலக் கடவுளும் உயிர்கள்மேல் வைத்த இரக்கத்தால் யாவராலும் அறியமுடியாத தானே எளிவந்து சிற்றின்பத்தின் மயங்கிய வுயிர்களைத் தன்னாற் பழக்கப்பட்ட மாணவர்களாகிய அடியார்களைக் கொண்டும் யாகக்குழியில் சிவத்துவத்தை யோமஞ்செய்தும் அவ்வுயிர்களின் மும்மலமாகிய மதத்தைக் களைந்து பஞ்சாக்கரமாகிய மந்திரங்களால் தன் திருவடியைப் பற்றச் செய்து பேரின்பத்தினை அவற்றிற் கூட்டும் யோகதீக்கை, அவுத்திரி தீக்கைகளையும் செய்து அருள் செய்கின்றார். மாணவன் தானே குருவை நாடுதல் இல்லை; குருவே மாணவனை நாடிவருகின்றார். ஞாயிற்றின் ஒளியால் அதன் முன்னிலையிலுள்ள சூரியக் காந்தக் கல் தன் பக்கத்துள்ள பஞ்சினை யெரித்தல் போல மாணவனும் ஆசிரியன் முன்னிலையிற் பெற்ற அனுக்கிரகத்தால் தன்னிடத்துள்ள அஞ்ஞானத்தை யொழித்துக்கொள்ளுகிறான்.

## ஆசிரியர் வகை

1. நிசிதகுரு—வசியம் உபதேசிப்பவர்
2. காமியகுரு—காமியத்தைப் போதிப்பவர்
3. போதககுரு—சாஸ்திரங்களைப் போதிப்பவர்
4. பேதககுரு—உண்மையை அறிவிப்பவர்
5. சூசககுரு—புலனையடக்குபவர்
6. வாசககுரு—கடவுள்நிலை, உயிர்நிலை இவற்றை உபதேசிப்பவர்
7. காரககுரு—
8. விகிதகுரு—இறைவனோடு சேர்ப்பவர்

## பக்தி

### குருவினிடம் அன்பு செய்யும் முறை

எந்த ஒன்றினிடத்தில் நமக்குப் பக்தியுளதோ அதைத் தவிர வேறொன்றிலையெனக் கொள்வதே பத்தியின் தன்மை. இதர தெய்வப் பூசையிற் பற்றின்றி முக்கரணங்களாலும் அட்டாங்கங்களோடு அகிம்சை முதலிய குணங்களோடு குருவினை வழிபடுதல் வேண்டும்.

"பத்திக்கு வித்துப் பணிந்து" என்பது திருமந்திரம். அட்டாங்க வழிபாட்டிற்கு நல்ல மனமாகிய மலர்வேண்டும். அகிம்சை முதலிய எண் குணங்களும் எண் வகை மலர்களா கும். குருசேவை சைவர்களின் இரண்டாவது கடமையாம். கடவுளிடம் போலக் குருவினிடம் பத்தி செய்தவனுக்குத் தான் பலனுண்டு. குருவினிடம் "நான் யார்? எனக்கு இப்பிறப்பு வந்தது எப்படி?" என வேண்டிக் கோடல் வேண்டும். குருவினைக் காண்டலும் அவர்தம் திருவார்த்தையினைக் கேட்டலும் அவருடைய திருநாமத்தைச் செப்புதலும் அவர்தமுருவத்தைச் சிந்தித்தலும் மாணவர்க்குத் தெளிவு பயக்குமென்பதனை,

"தெளிவு குருவின் திருமேனிகாண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தைகேட்டல்
தெளிவு குருவின் திருநாமஞ்செப்பல்
தெளிவு குருவுருவஞ் சிந்தித்தல்தானே"

என்றதனால் அறியலாம். குருவினுடைய அருளால் யோகம் சித்திக்கும். தமிழ் நாட்டிற் பிள்ளைகள் படிக்கும்பொழுது முதலிற் சொல்வது "நன்றாக குருவாழ்க குருவே துணை" என்ற தொடரேயாம். ஞானிகளுக்கும் குருவணக்கம் வேண்டும். எடுத்துக்காட்டாக இங்கு பெருமிழலைக் குறும்பநாயனாரது வழி பாட்டைச் சொல்லலாம். இவர் நம்பியாரூராராகிய சுந்தரரை ஆசிரியராகக் கொண்டார். அவரது திருவடி நினைந்து வணங்கு தலையே நியமமாகக் கொண்டார்.

சுந்தரரைக் கையாற்றொழுது வாய்வாழ்த்தி மனத்தா னினைக்குங் கடப்பாட்டினையே வீடடையுஞ் சாதனமாகக் கொண்டு சுந்தரருக்கு முன்னர்க் கயிலையை யடைந்த சிவயோகி யார் பெருமிழலைக் குறும்பநாயனாராவார். திருமுறையுள்ளும் பீடுடைத் தேசிகன் பொருளாகிய குருவருளுரைக்கும் தோடு கூற்றுப்பித்தா என்ற மூன்று பதிகங்களே முதலிற் கூறப் பெற்றுள்ளமை கொண்டு குருபக்தியின் இன்றியமையாமை யுணரலாம்".

௬

# தமிழ்மொழியும் கவிஞர்பெருமையும்

(இஃது 27—11—38உயில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் செய்த சொற்பொழிவு)

நாம் காணும் உலகப்பொருட்களனைத்தும், உயிர்ப்பொருள், உயிரில் பொருள், அல்லது பருப்பொருள், நுண்பொருள் என இருதிறத்தனவாம். பருப் பொருட்களை நுண்பொருட்கள் ஏற்றவாறியக்கிப் பயன் கொள்வனவாகவும், நுண்பொருட்களைப் பருப்பொருட்கள் தாங்கி ஆக்கம் செய்து விளக்கம் பெறுவனவாகவும் ஒன்றற்கொன்று பயன்படுமாற்றால் இயற்கையாக அமைந்துள்ளன. மேற்கோளாக உடலையும் உயிரையும் கொள்ளலாம். உயிர் உடலை வளர்த்துப் பேணித் தன் பயனை அதனால் அடைவதும், உடல் உயிரைத்தாங்கி அதனால் மதிப்புறுவதும் கண்கூடே. இங்ஙனமே, மக்கட்பிறப்பினர் உயர்நிலையெய்தி மதிப்போடு வாழ்வதற்கும் ஓர் பருப்பொருளும் ஓர் நுண்பொருளும் இன்றியமையாதனவாகின்றன. அவை ஒன்று செல்வம், பிறிதொன்று கல்வி. செல்வம் பருப்பொருள், உடம்புபோல்வது. கல்வி நுண்பொருள் உயிர் போன்றது. இவை ஒன்றையொன்று தழுவிப் பெருமையும் விளக்கமும் தருகின்றன. "சிவம் சத்தி தன்னையீன்றும், சத்தி தான் சிவத்தையீன்றும் உவந்திருவரும் புணர்ந்திங்குலகுயிரெல்லா மீன்றும்," எனக் கூறும் மெய்யறிவு நூற்கொள்கையே போலச் செல்வத்தாற் கல்வியும், கல்வியாற் செல்வமும் இவ்விரண்டானும் மக்கள் வாழ்க்கையின் மேம்பட்டபயன்களனைத்தும், விளைவனவாகின்றன. செல்வமில்லாவிடத்துக் கல்வி சிறப்புறாதென்பதனை ஓர் கவிஞர், பெண்களின் இடையின் சிறுமைகூறி அழகின் பெருமையைப் பாராட்டுகின்றுழி, "வறுமையிற் கல்வி போலப் புலப்படா மருங்குனல்லார்" என்றுரைத்தனர். ஆங்கே, கல்வி இல்லாவழிச் செல்வமும் யாதும் பயன்படாதென்பதனை, "அறிவுடையாரெல்லாமுடையர் அறிவிலா ரென்னுடையரேனுமிலர்" எனத்தமிழ்மறையும் அருளிற்று. இவ்வாற்றால் ஒரு நாட்டுமக்கள் பிறரெல்லோரும் நன்கு மதிக்கத்தக்கதோர் உயரிய நன்னிலைமையெய்தி வாழவேண்டுமானாற் செல்வத்தானும் கல்வியானும் மிக்கோராதல் வேண்டுமென்பது நன்குபுலனாகின்றது.

இனிக் கல்வியைப்பற்றிக் கருதுவோம். எந்நாட்டினரும் தத்தமக்கேற்ற கல்விகேள்விகளைத் தங்கள் தாய்மொழி வாயிலாய்ப் பெறுதல் இயல்பே. உலகத்தில், கற்றோன்றி மண்தோன்றாக் காலங்கொட்டு இந்நாட்டில் வழங்கி வருவது நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி. தமிழ் மொழி யென்றால் தனக்கு நிகரற்றமொழி, மிக இனிமையுடைய மொழி என உறுப்புப் பொருள் கொள்ளப்பெறும். ஒருமொழியாளர் தம் மொழியையே உயர்வுடைத் தெனக் கூறுதல் இயல்பே; அவ்வாறன்றிப் பிற மொழிக்குரிய அறிஞர் ஒருசிலர், நம்மொழியை உயர்விற்று எனக் கூறுவரேல் அது சாலச்சிறப்புறும். ஆயிரக் கணக்கான காவத தூரமுள்ள ஓர் நாட்டிற் பிறந்து ஆங்கிலப் பாலைச் சொந்தமாயருந்தி வளர்ந்த 'போப்' என்னும் அறிஞர் பெருமான் தம் இறுதிநாளில், தம்மைப் புதைக்குமிடத்தே "தன்னை ஒரு தமிழ் மாணக்கன்" எனக்கல்லெழுதி நாட்டுக என்று வேண்டிக்கொண்ட செய்தி ஒன்றே நம் கன்னித்தமிழின் ஏற்றத்தை நன்கு துலக்குவதாம். வீரமாமுனிவரெனப் புனை பெயர் சூடிய பிறநாட்டு வேற்றுமொழியாளர் இம்மொழியை ஆய்ந்து சுவைத்து ஆர்வமீதூரச் சில நூற்களும் இயற்றிப் போந்தார். மகமதியருள்ளும் ஒருவர் சீறாபுராணம் செப்பினர் என்றால், தன்னையுணரா வறிஞர்க்கன்றி உணரும் அறிஞர்க்கு உள்ளமுருகி உவகை மீக்கூரத் தன் இனிய, மென்மையும் எளிமையும் விழுப்பமும் சிறந்த நல்லழகான் மயக்கித்தன்பால் அவர்கள் கருத்தைப் பேராமற் பிணிக்கவல்ல செம்மொழி நம் மொழியே எனப்பெருமை பேசுவது முற்றிலும் பொருந்து மன்றோ!

பிறமொழியைக் குறைகூறுவது நம் கருத்தன்று. நமது தாய்மொழியின் தனிச்சிறப்பை நாவாரப் புகழ்ந்து போற்றுவது நம் தலைக்கடன் என்பதே ஈண்டு வற்புறுத்தப் பெறுவது.

மக்களின் எண்ணங்களே, சொல்லுருவில் வெளிப்பட்டுப் பரவுகின்றன. அச்சொற்கள் கொண்ட கருத்துக்களே திரண்டு நூலுருவாகி எய்ப்பில் வைப்பாக நமக்குக் கிட்டுவன. ஆகவே அவ்வக்காலத்து மக்களின் நடை நொடி பாவனைகளாக வெளித் தோற்றிய எண்ணங்கள் அவ்வாறிருந்தன எனப்படம் பிடித்துக் காட்டுவது போலத்திகழ்ந்து விளங்குவன நூற்களே.

காலத்திற்குக் காலம் ஒருமொழி சிதைந்து உருமாறிக் கொண்டுவருமானால், தன் முன்னையுருவம் முற்றும் ஒழிந்து

வேறு இடைப்பிற நுழைந்த வேற்றுமையுருப் பெற்றுக்கேடுறுவதாகும். அங்ஙனம் கேடுறின், அம்மொழியாளர், தம் மூதாதையோரின் பண்டைவழக்க ஒழுக்கச் சிறப்புக்களையும் வரலாறுகளையும் அறிந்து ஊக்கமெய்தி மகிழற்குரிய அரும் பெரும் பேற்றை அடியோடிழக்கும் பேதையரேயாவர்!

ஒரு மொழியின் வளர்ச்சியும் தளர்ச்சியும்கொண்டு கருதினால் அம்மொழியாளரின் எற்றமும் இழிதகவும் உணர்ந்து கொள்ளலாம். என்னை? உயரிய கருத்துக்களும் சிறந்த ஒழுக்கமும் நிகழுங்காலத்து எழுதப்பெறும் நூற்களின் திட்ப நுட்பங்களும், உள்ளீடற்ற வெறுங்கருத்துக்களும் போலி ஒழுக்கமும் நிகழும் காலத்து எழும் நூற்களின் எளிமையும் சிறுமையும் ஒன்றற்கொன்று மாறுற்றுத் தம் உண்மையை வெளிப்படுத்துமாகலான் என்க.

“உலகுமுவப்பவலனேர்பு திரிதருபலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு” என்ற தமிழ்ச் செய்யுள் நடைக்கும், “ஆலடிப் பிள்ளையாரே அரசடி விநாயகனே, அத்திமுகத்தோனே அரனார் திருமகனே” என்னும் அம்மானைச் செய்யுள் நடைக்கும் உள்ள வேறுபாடு கண்கூடல்லவா? மக்களின் காலவேறுபாட்டின்பாற்பட்ட அறிவு வளர்வு தாழ்வுகளைக் குறிப்பதல்லவா? உயர்ந்த எண்ணங்களும் சிறந்த செயல்களும் ஒருங்கு நிகழ்ந்தகாலம் சங்கநூற் காலமே என்று கருதுவது தவறாகாது. மனிதர்கள் துய்க்கும் பல்வகை யின்பங்களுள், அறிவுடைப் பெருமக்கள் உடலொடு நின்று துய்க்கும் தலையாய இன்பம், கல்விப்பயனாகிய அறிவான் வரும் இன்பம் ஒன்றுமேயாம். இவ்வரியவுண்மையை ஐந்திரம் நிறைந்த நம் ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளதிகார மெய்ப்பாட்டியலில் உவகைச்சுவைக்குப் பொருள், செல்வம் புலனே புணர்வு விளையாட்டேன, அல்லனீத்தவுவகை நான்கே எனக்கூறிக் கல்வியறிவான் வரும்உவகை, ஏனையவற்றினும் தனிப்படச்சிறந்ததெனக்குறிப்பார் ஏகாரம் புணர்த்து விதப்பாராயினார். “தவலரும் தொல்கேள்வித் தன்மையுடையார், தம்முட் குழீஇ நகலினினிதாயிற் காண்பாம் அகல் வானத் தும்பருறை வார்பதி” என்னும் செய்யுளும் இவ்வுண்மை தேற்றுவதாம். எழுத்துக்களில் வரிவடிவெழுத்தைப் போன்று ஒலிக்கும் உருவுண்டென்னும் உண்மையைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் விளக்கிப் போந்தனர். ஒலி உருவுடைத்தாயினமையானன்றே ஒலிப்பதிவுக் கருவியால் நாம், பலர் நெடுந்தூரத்துப் பாடும் இசைகளை இன்று கேட்கின்றோம். பகலவன்

மண்டலத்தோர் பகுதி பிளவுற்றுத் தென்பால்விழ அதுவே நாளடைவிற் குளிர்ந்து உலகுமாயிற்றெனெ மேனாட்டு ஆராய்ச்சியாளர் குறிக்கின்றனர். அதுகொண்டு அவர்கூறும் உலகம் தமிழ்நாடே யாகல் வேண்டுமெனக் கொள்ளக் கிடத்தலின், நம் தமிழ் மொழியே எல்லா மொழிகட்கும் முதன் முதற்றோன்றிய தெனக்கூறுவது தவறுபடாதன்றோ? "பழங்குடி பண்பிற்றலை பிரிவதின்று' என்னுங் குறளின் உரையில் 'பழங்குடி படைப்புக்காலந் தொட்டுப் புகழ்பெற வருவது" எனக்குறித் திருப்பதும் ஈண்டு நோக்கற்பாலது. ஒருமொழி சிறந்த நல முடைத்தாக வேண்டின், அம்மொழி பல மொழிகளையும் பெறும் வன்மையும், பிறமொழியிற் சிறப்புற்ற கலைப்பகுதிகளைத்தன் கட்கொள்ளும் ஆக்கமும், உடைத்தாகல் வேண்டும். நம் தாய் மொழி, கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் ஆகிய பல மொழிக்கும் அன்னையாயுள்ளது. மொழி பெயர்த்தற்கும் இலக்கணம் இடனளிக்குஞ் சிறப்புற்றது. 'தமிழ்' எனத்தன் பெயரையே பிறமொழியில் எழுதற்கரிய பெருமையுற்றது. இடம்பெறச்சுழன்று அமங்கலம் குறியாது வலம்படச்சுழன்று மங்கலம் விளக்கும் வரிவடிவெழுத்துக்களை யுடையது. கூறற்கெளியது. பொருள்விரியச் சுருங்கச் சொல் லும் குறிப்பால் மக்களின் சிக்கன வாழ்க்கையைச் சுட்டுவது. இம்மட்டோ! அன்பை அகத்தும் வீரத்தைப் புறத்தும் காட்டித் தமிழர்கள் வாழ்க்கை நோக்கத்தை நுண்ணிதிற் றெரிக்கும் தன்மைவாய்ந்தது. எவ்வுயிர்க்கும் அன்புகொண் டொழுகல் நம் தாய்மொழியின் திருவுள்ளக்கிடை. அறிவிலாப் பேதையரால் அறங்கெட நேர்ந்துழி வீரத்தால் நீக்கி மேன்மை பயப்பது புறச்செய்கை. இவ்விருதன்மையையும் விளக்கவந்த கம்பர், சுக்ரீவனுக்கு அரசியலறங்கூறும் இராமன் கூற்றாக வைத்து, "நாயகனல்லனெம்மை நனிபயந்தெடுத்து நல்குந்— தாயென வுலகங்கூறத் தாங்குதி தாங்குவாரை ஆயது தன்மை யேனும் அற வரம்பிகவாவண்ணந்—தீயன கண்டபோது சுடுதி யாற்றீமையோரை" எனக்கூறி விளக்கினார். அன்பையே கடவுள் எனக் கூறும் மொழி நம்தமிழ்மொழி யொன்றே. அஃது தமிழறிஞர்கள் அஃகியகன்ற அறிவுக்கருவியால் துருவிக்கண்ட மறுக்கொணா உண்மை. இவ்வன்பை விளக்கவந்த கம்பநாடர்,

என்பென்ப தியாக்கையென் பதுயிரென்ப திவைகளெல்லாம்
பின்பென்ப வல்லவேனுந் தம்முடைநிலை யிற்போரா
முன்பென்ப வுளவென்றாலும் முழுவதுந் தெரிந்தவாற்றால்
அன்பென்ப தொன்றின் றன்மையமரு மறிந்ததன்றால்

எனமொழிந்தனர். உயிரே எல்லாப் பொருளினும் சிறந்தது. அதற்கின்றியமையாதது உடல்; அவ்வுடற்குறுதிதந்துதவுவது என்பு. ஆக இம் மூன்றும் சிறப்புடைய பொருட்களே எனினும், இம் மூன்றையும் அன்பு காரணமாக ஒருவன் இழக்க முற்படலுண்மையின், அன்பொன்றே தன்னிகரில்லாத்தலைமை வாய்ந்து சிறப்பதாம். மற்று, என்பாதிய மூன்றும் இருந்துழி யன்றே அன்பு தோன்றுவது எனக்கருதுங்கால், அவை மூன்றும் முதன்மை பெறுதற்குரியனவாமே யெனின் அற்றன்று. மனிதன் அறிவினெல்லைக்குட்பட்ட பொருட்கள் யாவும் சிறுமையுடையன. அறியப்படாதவற்றிற்கே சிறப் புண்மையின், இம் மூன்றும் இத்தகையவென ஓராற்றால் அறியப்படுதலானும், அன்பு இன்னும் தேவர் முதலியோரானும் அறிதற்கொண்ணாததாதலானும், அஃதே ஒப்பின்றிச் சிறந்த தொன்றாம் என அநுவதித்துப் பொருண்முடிபுரைத்தவாறு காண்க. இவர் கூறும் அன்பாம் இலக்கணத்திற்கு இலக்கிய மாகத் திகழ்வது பெரியபுராணம். இப்புராணம் முற்றும் அன்பின் திருவிளையாடல்களே. புறப்பொருட்களாகிய பொன்னை, மனைவியை, அருமைமகவை, இழக்கக் கவலையின்றி உவந்த செயல்களும், கண்முதலிய உறுப்புக்களையும் ஒருங்கே தம் உயிரையும் ஆர்வமுற அளித்த அருமைப்பாடும், அன்பின் மிக்கதொன்றில்லை யென்னும் பேருண்மை காட்டி வீறுற்ற நாயன்மார்களின் ஒழுகலாற்று முறையால் வெளிப்படல் காண்க பின். இங்ஙனம் தமிழ் நூற்களின் பெருமைபேசு முகத்தாலே கவிஞர் பெருமையும் உடம்பொடு புணர்த்தலாக வெளிப்பட்ட மையின், எஞ்சிய எச்சத்தை முற்றுவித்து வினைமுடிப்போம்.

ஈண்டுக் ‘கவிஞர்’ எனக் குறித்தது, நல்லிசைப் புலவராய சங்ககாலத்தினரையும், பின்னுறச் சிறப்புற்ற சிலரையுமே. அவர்தம் கருத்தில், சிறந்த அரிய பொருட்களும் இயற்கைப் பொருட்களை நன்கறிந்து உவமிக்கும் அறிவின் மாட்சியும் விளங்குவன. தன்மை நவிற்சி, பாவிக முதலிய சீரிய அணிகள் கற்போர்க்கு மாறாது மகிழ்வூட்டுவன. அவர்களின் செயலருஞ் செய்கைகள், பெருமிதந் தோற்றி வியப்பு விளைக்கும்தகையன. அவற்றிற் சில கூறுதும். ஓர் புலவர் ஓரரசனை விதந்து அவன் செங்கோற்றிறத்தையும் வீரத்தையும் புகலுமிடத்து, “அரசே! நின்னிழல் வாழ்வோர், சோறு படுக்குந் தீயையும் பகலவன் வெம்மையையுமன்றி வேறு வெம்மை தீண்டப்பெறுவாரல்லர். ஏர் உழும் கலப்பையை அன்றிப் பிற படைக்கலங்களின் பெயர்

தானும் அறியார். பிறர் மண்ணைக் கவரும் நின்னாட்டு மண்ணைக் கருவுற்ற பெண்களுண்பதன்றிப் பிறர் கொண்டுண்ணப்பெறார் என வுரைத்த பொருள்வளம் நம் உள்ளங்கவர்தற்குரியதொன்றன்றோ. ஓரரசன் கொண்ட சினத்தைச் சிறப்பிப்பாரொரு புலவர், அம்மன்னன், தன்மனையாள் அன்றீன்ற அரிய ஆண் மகவின் முகத்தை நோக்கியும் முன்பகைவர்பாற்கொண்ட சினங்கட்கும் கண்ணின் சிவப்பு மாறிற்றில்லை, என்கின்றார். பின்னொரு புலவர் மாதர்களின் கொங்கையாற் பொரப்படுவதன்றி வீரர்களால் நின் மார்பு மலைத்தற்கரியது, என நவின்று ஒரு வேந்தன் பெருமையை வியந்து தமது பெருமையை நாம் கருத அளிக்கின்றார். பிறிதொருகவி, ஓர் நாடேயாக, அன்றிக்காடேயாக பள்ளமேயாக, மேடுதானேயாக இவ்வாற்றால் நிலத்திற்குப் போந்த சிறப்பொன்றில்லை, எவ்விடத்து நன்மக்கள் வதிகின்றனரோ அந்நிலமே நன்கு மதிப்பெய்துவதாகின்றது என்றரிய கூறி உண்மை காட்டுகின்றார். நெல்லும் நீரும் மக்கட்குயிர் காப்பனவாகா. அரசனொருவனே மக்களின் இன்னுயிர் ஆகின்றான். அதனால் அவன் தன்னைத் தன்கீழ் வாழுங் குடிகளுக்குயிராகின்றேன் யானே என அறிந்து அவர்களை இன்புறவாழ்வித்தற் குரியன், என்றும், சிறு பரப்பிற்றாய ஒருமா நிலத்திற் குறையினும் அதில் விளையும் நெல்லையறுத்துக் கவளம் கொடுப்பின், பன்னாட்களுக்கும் யானைகளுண்ண உணவாம், அவ்வாறன்றி நூறுசெய்யாயினும் அதில் விளையும் நெல்லை ஓர் யானை தனித்துண்ணவிடின் அதன் வாய்ப் புகுவதினும் காலாற்றுவைப்புண்டு பலப்பல சேதமுறும்; அங்ஙனமே அரசன் குடியிறையை அளவுக்குட்பட்டுப்பெறின் அந்நாட்டினர் குறைவின்றி வாழ்ந்து மேலும் பயன் விளைப்பர்; பேராசையாற்றானும் தன்பரிசனரும் மிக வரிவிதித்துக் குடி கொன்றிறை கொள்வாரேல், நாடும் தாமும், ஒருங்கே கெடுவர்; எனவும், இங்ஙனம் அரசர்கட்குப் பல நன்னெறி புகட்டிக் குடிகட்கு நன்மை விளைவித்தனர். இனி அவர்கள் இயற்கைப் பொருளை நுனித்துணர்ந்து உவமங்கூறும் வகையினும் சில காண்போம். அணிலின் முதுகையொத்தது வெள்ளரியின் மேற்புறம், வேப்பின் மலரை ஒத்தது ஞெண்டின் கண், வாதம் செய்யும் வாதியின் விரலினைப் போன்று இரட்டைக்கதிர் விடுவன வரகு. முல்லை முகையை ஒக்கும் பூஞையின் பற்கள், தயிர்க் கட்டி பிதிர்ந்து உக்கனவனைய அவரையின் சிந்தும் பூக்கள். இங்ஙனம் வியக்கத்தகும் உவமங்கள் எத்துணையின என்பேம்! குளிர்காலத்தைப் புனைந்து கூறும் நெடுநல்வாடை ஆசிரியர், மதி

நுட்பத்தைச் சிறிது நோக்குதும். முல்லை நிலத்தில் ஆயர்தம் பசுத்தொழுதிகளை மேட்டு நிலத்தில் கிடை சேர்த்தினர். குளிர் மிக்கமையின் பற்கள் பறை கொட்ட நடுங்குவார், அனலில் கையைக் காச்சிய வெப்பத்தைக் கவுளில் ஒத்திக்கொள்கின்றார் கள். வாடைக்காற்று மழைத்துளியோடு துவன்றி வீசலால் விலங்குகள் புல்லுணக் கொள்ளாது நின்றன. கற்றுக்கள் தம் இளங்கன்றிற்குப் பால்கொடாதுதைத்துதறின. பறக்கும் புட்கள் நனைந்த சிறகின் பாரத்தால் மண்மிசை வீழ்ந்தன. இரவில் மலர்கின்ற தன்மை நோக்கிப் பிச்சிப் பூக்கொண்டு பகல் இரவறிவதல்லது இருண்டமேகக் குழுவால் மயங்கும் காலம் வேறோராற்றான் அறிதற்கரிதாயிருந்தது. முசுண்டை யும் பீர்க்கும் மலர்ந்தன. நெற்கதிர் விளைவு கொள்ளக் கமுகங் குலை முற்றின. மரக்கிளைகளிற் றங்கிய நீர்த் துவலைகள் சொட்டிக்கொண்டிருந்தன. மங்கையர், குழலில் நிறையப் பூ மாலை சூடாது சில மலர்களைச் செருகிக் கொண்டனர். ஆல வட்டங்கள் (ஒருவகை விசிறி) உறையிலிடப்பட்டு மேலே சிலம்பியின் நூல் வலந்தனவாயிருந்தன. வீட்டின் பலகணிகள் தென்றல் புகாவாறு அடைக்கப்பட்டன. வெந்நீர் பருகற் குரியதாயிற்று. வீணையின் நரம்புகள் குளிர் மிகுதியால் இனிய ஓசைபயவாமையின், மங்கையர் தம் முலையின் வெப்பம் பெற அந்நரம்புகளைத் தேய்த்து இன்னிசைகொள்வோராயினர், தங்கணவர்களைப் பிரிந்த மகளிர் புலம்புற இங்ஙனம் குளிர் வாடை எதிர்ந்தது என இயற்கைவளத்தை நம் நெஞ்சகத்துப் பொறித்தனர். ஓர் வறிஞன் இல்லத்தைப் புனைந்துரைக்கும் நல்லிசைப் புலவரொருவர் திறக்கப்படாத கண்களையும், மடிந்து வீழ்ந்த காதினையுமுடைய ஒரு நாய்க்குட்டி சுவைக்கும்போது அதன் தாய் நாய், யாரும் கறவாத பத்து முலைகளிலும் சிறிது பாலுமின்மையினால், பொறாது குலைத்துக் கொண்டு படுத்துக் கிடக்கும் அடுப்பில் காளானும் பூத்திருந்தது. வீட்டின் மேற் கூரை கறையானுண்ண மூங்கில்கள் வீழ்ந்துகொண்டிருந்தன என்று கூறி அவ்வெளியவன் மனைவி தன் கைந்நகத்தால்பறித்த குப்பையிலுள்ள வேளைத்தழையை உப்பின்றி அவித்து, தன் மக்கள் முதலிய பெருஞ்சுற்றத்தாரோடு உண்ணுங்கால் கதவு மூடப்பெற்றது. ஏனெனில், மிகவும் எளிய இந்நிலைமையை, வறுமையும் செல்வமும் வருவதும் போவதும் என்றும் எங்கு முள்ள இயற்கையே என்னும் உண்மையறியாத அசட்டுப் பேதையர்கள் காணின் எள்ளி நகையாடுவாரே என்னுங் கருத் தாலேயே என மிக நயமுற விளக்குகின்றார். ஓர் முடிமன்னன்

போர்புரியும் பாடிவீட்டில் (பாசறை) தங்கியிருக்கும் செய்தியைச் செப்பவந்த ஓர் புலவர், யானைகளின் துதிக்கைகள் பாம்புபோல் புறழ வெட்டிக் கொன்ற தன் படைஞர், தம் உடம்பில் அம்பு முதலியவைதைத்துண்டாகிய படுகாயப் புண்களைப் பரிகரிக்கு மருத்துவருடன் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கும் வேந்தன், பெரிய விளக்கைக் கையிலேந்தி, வேப்பமாலையைத் தலையிற் சூட்டிய வலியகாம்பையுடைய வேலாயுதங்களைத் தாங்கி முன் செல்லும் படைத்தலைவர், புண்பட்ட அவ்வீரர்கள் கிடக்கையைச் சென்று சென்று முறையே காட்ட, வாயிற் கடிவாளம் நீங்கப் பெறாத குதிரைகள், தெருப்புழுதியில் வீழ்ந்து சிதறும் மழையாலுண்டாகிய சேறு தம்மேற்படிவதை உதறிக்கொண்டு நிற்க, வாளைத்தோளிற்றூங்கிப்போகும் சேவகன் தோண்மீது வலக்கை சாத்தி இடத்தோளினின்றும் நழுவி விழும் பொன்னாடையை இடப்பக்கத்தே பணைத்துக்கொண்டு புண்பட்டுளையும் வீரர்க்கு மகிழ்ச்சி தோன்ற முகம் பொருந்தி முகமன்கூறி, தவ்வென்னும் ஒலியுடன் வீழும் மழைத்துளியை வெண்கொற்றக்குடை தடுப்ப நள்ளிருளிலும் உறங்கானாயினன். பிறிதொரு பகை மன்னன், தன் பாசறையில், இரவைப் பகலாக்கும் ஒளி மிகுந்த வாளை இடைக் கச்சோடுபிணித்த பெண்கள் அவியும் நிலையிலுள்ள விளக்குகட்குத் தம் கைக்கொண்ட பந்தத்தைப் பொருந்திக் கொளுத்திவர, உறக்கத்துக் கேற்றகாலமாதலின், ஒலிக்கும் மணிகள் நாவடங்க, மயிர்க்கட்டுக் கட்டிச் சட்டையிட்ட மெய்காப்பாளர் சூழ, கடிகைமாக்கள் இத்தனை நாழிகை போந்தனவென்றுரைப்ப, படுக்கையில்புக்கு, பேசவறியா ஊமர்களாகிய ஏவன்மாக்கள் உலாவிக் காவல்புரியத்தான் சிறிதும் இமை பொருந்தாமல் ஒருகையைத் தலையணைமீதும் மற்றொருகையைத்தன் முடியொடும் சேர்த்து, பகைவர்தானைகளால் பதைக்கும் பாம்புபோல் துதிக்கை துண்டிக்கப் பட்டுத்தம் பெண்யானைகளையும் மறந்த யானைகளின் துன்பத்தை நினைத்தும், தனக்கு வெற்றிவிளைத்துச் செஞ்சோற்றுக் கடன் தீர்த்து மாண்டொழிந்த போர்வீரர்களைக் கருதியும், மேலெங்கும் அழுந்தித் தைத்த அம்புக்காயங்களால் செவி சாய்த்துப் புல்லுண்ணாது வருந்தும் குதிரைகளைக் குறித்தும் இப்படைகள் நொந்த அளவுக்கு நாளை எவ்வாறு போர்புரியும்? என நீடுநினைந்திரங்கிப் பெருமூச்செறிகின்றான், என அப்போர்க்களப்பாசறையை நம் மனக்கண்ணுக்குத் திறம்படக்காட்டுகின்றார். இங்ஙனந் தமிழ் மூதறிஞர் இயற்கையை விரிப்பன அளப்பில எனவிடுத்து, அவர் பெருமிதச்

செயல்களில் சில கூறி முடிப்பாம். தன் மக்களோடு பகைத்து வருந்தி உயிர் துறத்தற்கு வடக்கிருக்கும் (உண்ணாவிரதம் கொள்ளல்) கோப்பெருஞ்சோழனை நேரிற் கண்டறியா திருந்தும் அவன் கொடையையும் புகழையும் செவியுற்று நட்புற்ற பிசிராந்தையாரென்னும் புலவர்பெருமான், தன் அரிய நண்பன் உயிர் துறக்கும் தறுவாயில் செய்திகேள்வியுற்று வந்து தானும் உயிர் துறந்தனர். மற்றும் அச்சோழற் குற்ற நண்பராகிய பொத்தியார் என்னும் நாவலர், தாமும் அம் மன்னனோடு உயிர்நீத்தற் கிசைந்தபோது அவ்வரசன் நின் மனைவி கருவுற்றிருத்தலான் மகவீன்றபின் வருகவெனப்போக்க, அவ்வாறே மகப்பேறெய்தியபின் அவ்வேந்தன் புதைப்புண்ட இடத்து நாட்டப்பெற்ற கன் மருங்கெய்தி, "புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வாவென என்னிவணொழித்த அன்பிலாள! எண்ணா திருக்குவையல்லை யென்னிடம் யாதுமற்றிசை வெய்யோயே" "மகப்பேறுற்றபின் வருக என்று கூறி என்னைத் தடுத்து நிறுத்திய அன்பில்லாதவனே! நீயும் என்னை நினையாதிருப்பாயல்லை. இப்போது நின்னோடுயிர் துறக்க நிற்கும் எனக்கு நீ காட்டும் இடம் எங்கே, கூறுக" என்று ஆராமை கூர்ந்து நிற்க, அக் கல்லின் பக்கத்தே நிலப்பிளப்புண்டாகக்கண்டு, பெருங்களிப் போடு................ "நிலைபெறு நடுகலாகியக்கண்ணு-மிடங்கொடுத் தளிப்பமன்ற வுடம்போ-டின்னுயிர் விரும்புங்கிழமைத்-தொன் னட்புடையோர்." "இறந்து பட்டுக் கல்லாகி நின்றவழியும், உடம்பும் உயிரும்போல் வேறற நட்ட பழங்கேண்மையாளர் உறுதியாக இடம் கொடுத்தருள்வார்கள்" என்று கூறி உயிர் நீத்த செய்தியும், இவ்வாறே பாரியென்னும் வள்ளற்கோமகனை இழந்த கபிலரென்னும் அந்தணக்கவிஞர், அவனுடைய இரு பெண் மகளிர்க்கும் மணம் புரிவிக்கப் பாடுபட்டும் முற்றாது பார்ப்பாரிடத் தொப்புவித்து, அவ்வள்ளலின் பிரிவாற்றாது கவன்று,........"மலைகெழுநாட மாவண்பாரி-கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்-புலந்தனையாகுவை....பெருந்தகு சிறப்பினட் பிற்கொல்லா-தொருங்குவரல் விடாதொழிகெனக்கூறி,-யினையை யாதலினினக்கு மற்றியான்-மேயினே னன்மையானே யாயினு-மிம்மைபோலக் காட்டியும்மை-யிடையில் காட்சி நின்னோ-டுட னுறைவாக்குக வுயர்ந்தபாலே." "மலைசூழ்ந்த நாட்டையுடைய பெரிய வள்ளலாகிய பாரி! என்னோடு வேறற நட்ட கேண்மைக்குத்தகாது, என்னை நின்னோடுயிர் துறக்க விடாமற் றடுத்தனையே! யான் உனக்குப் பொருந்தினேனல்லாததானோ? ஆயினும் இவ்வுலகத்து நாம் இருவரும் பிரியாது வாழ்ந்தாற்போல்

மறுபிறப்பினும் உன்னோடு நான் கூடிவாழும் பேற்றை உயர்ந்த விதி கூட்டுவதாக" எனப் புகன்று வடக்கிருந்து உயிர் துறந்தாரென்னும் செய்தியும், எத்துணை பாராட்டற்குரியன நோக்குமின்! இவையன்றி பேகன் மனைவியாய் கண்ணகியை அவன் வெறுத்து நீக்க, பரணர் என்னும் அறிஞர்பிரான்......."பசித்தும் வாரேம் பாரமுமிலமே-அறஞ் செய்தீமோ அருள்வெய்யோயென-விஃதியா மிரந்த பரிசில் அஃதிருளி னினமணி நெடுந்தேரேறி—யின்னாதுறைவி யரும்படர்களைமே." ஏ! பேக! யாங்கள் பசித்தும் நின்பால் வந்தோமல்லோம். எம்மால் பரிக்கப்படும் சுற்றமுடையேமுமல்லேம். எமக்கு நீ அருள வேண்டிய பரிசில் ஒன்று; அஃது, இற்றை யிரவிலேயே நீ தேர்மிசைச் சென்று நின் மனைவியின் துயர் நீக்கலேயாம்," என்றுரைத்த பெருமையும், இளங்கண்டீரக்கோ வென்னும் அரசனைப்புல்லி, இளவச்சிரக்கோ வென்னும் அரசனைத்தழுவிக் கொள்ளாது "நீபாடுவோர்க்குக் கதவடைத்தவர் வழித்தோன்றலாகலின் நின்னை எம்போற் புலவர்கள் நீக்கினார்கள்." எனக் கூறும் பெருந்தலைச்சாத்தனார் கூற்றினின்றும், பண்டையரசர்கள் புலவராற் றழுவப்படுதலைப் பெருமையாகக் கொண்டிருந்தார்களென்னும் உண்மையும், புலவர்களாற் பாடப்பெறுவோர், வானவூர்தியிற் சுவர்க்கம் புகுவார்கள் என்னும் நம்பிக்கையிருந்தமையும் பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறியபோது, "என்பகைஞரைவென்றி கொள்ளேனானல் என்னாட்டைப் புலவர்கள் பாடாதொழிவாராக." எனக் கூறியதுகொண்டு பண்டைத் தமிழரசர்கள் புலவர்களாற் பாடப் பெறுமையை மிக இழிவாகக் கருதி வந்தார்களென்னும் வழக்கமும், பிறவும் அறிந்து மகிழற்பாலனவாம்.

# திருக்குறளும் உபநிஷதங்களும்

(ஒரு மறுப்பு)

திருவாளர். நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள், M. R. A. S.

சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்தின் திங்கள் வெளியீடாகிய ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயத்தின் பதினேழாம் தொகுதி ஐந்தாம் பகுதியின், தலைமையிடத்தில் விஜயவாசிரியரால் எழுதப்பெற்று வெளிவந்துள்ள 'திருக்குறளும் உபநிஷதங்களும்' என்னுங் கட்டுரையை, நாம் பேராவலுடன் பார்க்க நேர்ந்தோம். இவ்வாறு பார்ப்பதற்கு எம்மை ஊக்கியது இக்கட்டுரையின் பெருமைமிக்க தலைப்பும், இத்திங்கட்டாள் வெளிவரும் நிலையத்தின் நற்பெயருமேயாகும். இதைப் படிக்கத் தொடங்கி, சில வரிகள் சென்ற வளவிலேயே, கட்டுரையின் தலைப்புக்கும், நிலையத்தின் பெருமைக்கும் ஒருசிறிதும் பொருத்தமற்ற, அழுக்காறு கொண்ட வுள்ளத்தின் பிதற்றுரையாகவிஃது முடியுமோவென வையமுற்றேம்; படித்து முடிந்தவளவில் யாம் முதற்கொண்ட எண்ணம் முழுதும் பொருத்தமானதென்றே முடிவு கொள்ள நேர்ந்தது. இவ்வாறு யாம் கூறுவது காய்தலாலெழுந்த கடுமொழியன்றென்பதை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

விஜயவாசிரியர் தம் கட்டுரையை (1) எல்லார்க்கும் சொந்தம் (2) வேதவேதாந்தம் (3) கோணலான கூற்றுகள் (4) அறம் (5) பொருள் (6) இன்பம் (7) நூலமைப்பு என்று ஏழுவகையாக வகுத்துக்கொண்டு, ஒரே முடிவைக்கூறும் ஏழுநூல்களுள், தமிழ் மக்களிடை வழங்கும் திருக்குறளைமட்டும் பொதுமறையெனக்கூறி, வடமொழிப் பயிற்சியின்மையான் நான்மறையின் முடிவாயிருக்கும் உபநிஷதங்களை அவ்வாறு கூறாதது பொருத்தமன்றெனவும்; முடிவான தத்துவத்தை விளக்குவதில் திருக்குறள் உபநிடதங்களுக்கு ஒப்பாகாதென்பதை விளக்குவதே தம் நோக்கமெனவும், உலகின் தோற்றம், ஒடுக்கம், தொடர்பு, வெளிப்படையான மாறுபாடுகளின் அடிப்படையான மாறு வியற்கை முதலியவற்றை ஐயம் திரிபற விளக்குவன வேதமெனவும், திருக்குறள் அவ்வாறு விளக்காததோடு வீட்டைப் பற்றி ஒன்றுமே கூறவில்லையென்றும், உபநிடதங்களால் கடியப்பெற்ற 'காமம்' திருக்குறளில் ஓர் பகுதியாகவமைந்துள்ளமையால் அப்பகுதி எவரும் படிப்பதற்குக் கூடா இழிவுடைய

தென்றும், உபநிடதங்கள் எழுந்ததோருயர்ந்தவுள நிலையில் திருக்குறள் எழவில்லையென்றும், முடிவில் 'காமத்துப்பாலைக்' கூருது வள்ளுவனர் வீட்டின்பாலை கூறியிருப்பாரேல் திருக்குறள் உபநிடதங்களை வென்றிருக்கும் என்றும் எழுதுகிருர்.

விஜயவாசிரியர், தாம் உபநிடதங்களிடம் கொண்டுள்ள பேரன்பையும், அவற்றை உயர்த்திக் கூற வேண்டுவதற்கு மற்ெருரு உயர்ந்த நூலைக் குறைகூற வேண்டுமென்னும் ஓர் இழிந்த உளப்பான்மையையும், ஆராய்ச்சிமுறையும், தமிழறிவும் ஒருங்கே வாய்க்கப் பெருத தமது தகுதியின்மையையும், கட்டுரையைத் தொடங்கும்பொழுதே "திருக்குறள் தமிழ் வேதம் என்று சொல்லப்படுகிறது" "அதைப் பொதுமறையென்று பலர் சொல்லுகின்றனர்" "உபநிஷதத்தைப் பற்றி அப்படிச் சொல்லுபவர் தமிழ் உலகில் அதிகம் பேர் இல்லை" என்ற பல அழுக்காறு பொதிந்த உரைகளால் அறிவித்துக் கொள்ளுகின்ருர். "தேவர் குறளும்" எனத் தொடங்கும் வெண்பாவை எடுத்துக்கொண்டு அதன்படி எழுநூல்கள் ஒரே முடிவினவாகவும், திருக்குறள் ஒன்றையே பொதுமறை எனல் யாங்ஙனம் பொருந்தும் எனக் கதறுகின்ருர். தாம் எடுத்துக் கொண்ட செய்யுள் ஒரு போலிச் செய்யுள் என்பதை இவர் அறிந்திலர் போலும்; அச்சிட்டு வழங்கும் பாட்டுக்களெல்லாம் இவர்க்கு அறிஞராணையோ? இவ்வறியாமை ஒருபுறமிருக்க, இவ்வாராய்ச்சி அளவையைப் பார்க்கின், பெருநகையாகின்றது. ஒரு முடிவு கொண்டனவாக பலநூல்களிருப்பின் ஒன்றற்கு வழங்கும் சிறப்புப் பெயரை ஏனையவற்றிற்கும் வழங்கவேண்டும் என்றநெறியை இவர் எவ்வளவையின்பாலறிந்தாரோ அறிகிலம். சிலபண்புகள் ஒத்துள்ளமை கொண்டு உலகில் ஒன்றை ஒன்ெருடு ஒப்புமை கூறுவதுண்டு; அவ்வாறு ஒப்புமை கூறியது கொண்டே ஒன்றை ஒன்ருகக் கருதல் இவர் முடிவு போலும். "இம்மணமகன் காளை ஒப்பான்" என எவரேனும் இவரிடம் கூறின், இவர் உடனே தம் அளவையின்படி, மணமகனை ஏரில் பூட்டி வயலில் உழவும் தொடங்குவர்போலும். நிற்க, திருக்குறளைப் பொதுமறை எனத் தமிழர் கூறுவதற்காக உளம் புழுங்கும் இவர் தனது உபநிடதத்தைப் பொதுமறை எனக் கூறிக்கொள்வதை மறுப்பவர் யாவர்? தமிழுலகம் அவ்வாறு கூறவில்லையாயின் இவர் அழுது அரற்றுவதால் வரும் பயன் தான் என்ன?

வேதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ள பல செய்திகளும் திருக்குறளில் காணப்படவில்லை யெனத் தெய்வக்குறளுக்கு

ஓர் இழிவு கற்பிக்கின்றார். வேதத்தில் காணப்பெறுவன பல, அவையெல்லாம் திருக்குறளில் காணப்படாமையாலேதான் குறள் பொதுமறை என உலகத்தால் போற்றப்படுகின்றது என்பதை இவர் அறிந்திலர் போலும். திருக்குறளை 'வேதாங்கம்' எனக் கூறலாம் எனக்கூறி, வடமொழிப் பயிற்சியில்லா, தமிழ் நாட்டிற்கு பொருள் நன்கு தெரியவேண்டி வேதாங்கம் என்றால் வேதத்தின் ஒரு பிரிவு என விளக்க வுரைசெய்து காட்டுகின்றார். இதுகாறும் 'வேதாங்கம்' என்ற சொல்லை வேதத்தை அறிவதற்குக் கருவிநூல்களாகவுள்ளவற்றிற்கு ஏற்றிக்கூறவே நாம் கேட்டிருக்கின்றோம், இதுபோது, இவர் தந்த, வேதத்தின் பிரிவு என்னும் நல்லுரைக்கு நன்றிபாராட்டு கின்றோம். வீடு பேற்றைப் பற்றிப் பலவரிகள் அழகாக எழுதியிருக்கின்றார். இவ்வநுபவமில்லாத யாம் அதுபற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. இத்தகைய அழகிய சொற்களால், உணர்வு ஒருசிறிது மின்றிப் பலவாகப் பேசும் ஒரு சமயப்பிரிவினரது போலிவுரைகளையும் செயலையும் பலநாட்களுக்கு முன்பே தமிழ்நாடு நன்கு தெரிந்து வஞ்சிக்கப் பெறாது தப்பித்துக்கொள்வதாயிற்று. இது குறித்தோ அறநெறிச்சாரமுடையாரும்

எத்துணை கற்பினும் ஏகான்மவாதிகள்
புத்தியும் சொல்லும் பொலிவிலவாய்—மிக்க
அறிவனூல் கற்றா ரலவெனவே நிற்கும்
எறிகதிர்முன் நீள்சுடரே போன்று. எனக்கூறுவாராயினர்.

'கோணலான கூற்றுகள்' என்ற தலைப்பில் விஜயவாசிரியர் திருக்குறள் வீட்டைப் பற்றி ஒன்றும் கூறவில்லையென்றும் அவ்வாறு கூறாததற்குக் காரணம் கூற முன்வருபவரெல்லாம் தங்கள் தங்கள் அறியாமையை வெளியிட்டுக் கொள்ளுகின்றாரென்றும் கடிந்து, தன் பேரறிவை வெளிக்காட்ட முன்வந்த பேதமை யாவருங் கண்டு எள்ளி நகையாடத் தக்கதேயாம். வீட்டைப்பற்றி குறள் ஒன்றும் கூறவில்லையென இவர்க்குக் கூறியார் யாவர்? திருக்குறளையேனும், திருக்குறளைப்பற்றிய நூல்களையேனும், இவர் ஒருமுறை படித்தவரைப் பார்த்திருப்பாரேனும் இவ்வாறு கூற முன்வரார். தேவரையும், திருக்குறளையும், பற்றி பேசியுள்ள பெரியோரெல்லாம் பெரிதும் மகிழ்ந்தும் வியந்தும்

" அறம்பொருளின்பம் வீடு என்னுமந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவு" என்றும்

"தப்பாமுதற்பாவாற் றமாண்ட பாடலினன்
முப்பாலினற்பான் மொழிந்தவர்" என்றும்

"நாலுமொழிந்த பெருநாவலர்" என்றும்

"இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்
கொள்ள மொழிந்தார் குறள்" என்றும்

"அறமுத னன்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனர்" என்றும்

"இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னன்கின் விதிவிளங்க வள்ளுவனர்
பாடின ரின்குறள்வெண் பா" என்றும்

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தேம் வீடு தெளிந்தேம்" என்றும்

பலபடியாக வள்ளுவனர் அருளிய வீட்டைப்பற்றிய நுண்மையையும், திறனையும், தெளிவையும் பாராட்டிப் பன்னூறாண்டுகட்கு முன்பே உலகிற் கறிவுறுத்தியிருக்கவும், விஜயவாசிரியர் இவ்வாறு கூறுவது, அறியாமையோ அதன்மேலெழுந்த ஆணவமோ அறிகிலேம். இம்மட்டோ! வீடு பேறெய்திய விழுமியோர்க்கும் வீட்டுநெறி விளக்கவந்த மேலோர்க்கும் திருக்குறள் ஒரு வழிகாட்டியாக நின்றுவரும் மாண்பை எண்ணுந்தோறெண்ணுந்தோறும் உள்ளம் உருகவில்லையா? இவ்வகை, ஒரு சிறிதும் தமிழுணரா விஜயவாசிரியரா வுணரவல்லர்? கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாயத் திருவாசகமருளிப் பெருந்துறைப் பெருமான் திருவடியமர்ந்த எம் வாதவூரண்ணல் உளமுவந்துரைக்கும்

'பிறவி யென்னுமிக் கடலை நீந்தத் தன் பேரருள்
தந்தருளினன்'

என்னும் இறைவனருட்செயலைக் கூறும்சொற்களையும் 'திறமை காட்டிய சேவடி' எனத் திருவடியின் பேரருட்டிறனைக் கூறும் நிலையையும்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்னும் திருக்குறளோடு ஒத்து நோக்கின், வள்ளுவனர் வீடு கூறினரிலர் எனக்கூற வாயெழவல்லதோ?

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்னும் அருளுரையும்

"பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகமும் ஒன்றோடொன்றெய்தியுள்ள ஒற்றுமை கண்டும் வள்ளுவர் வீடுகூறவில்லை எனக் கூறும் வீணர்தம் சொல்லை என்னென்றுரைப்போம். வீடெய்த நிற்கும் விழுமியோர் செயலையும் நிலையையும் கூறவந்த வள்ளுவனார் 'மெய்யைப் பொய்யினின்றும் பிரித்துணர்ந்தொழுக வல்ல பெரியோர்க்கு, ஏனையோர் உறுதியாக நிலத்துள்ளதென வெண்ணும் இந்நிலவுலகத்தினும் வானுலகமே நெருங்கியதாக நிற்கும்' என்னுங் கருத்துப் பெறக் கூறும்

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு—
—வையத்தின் வானம் நணியதுடைத்து'

எனும் அருளுரைக்கு, மணிவாசகப் பெருமான் தன் அருட் செயலைக் கூறுகின்ற

"நிற்பார் நிற்க ; நில்லாவுலகில் நில்லோம் ; இனிநாம் செல்வோமே,
பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன் ஆழ்வான்
பொன்னடிக்கே !

எனும் திருவாசகம் ஒருவிரிவுரையாகத் தோன்றவில்லையா? இதுகண்டும், வள்ளுவர் வீடு கூறினரில்லையெனும் வம்புரைகாரர்க்கு, யாம் என் சொல்வோம்? இப்பகுதியில் யாம் எம் விருப்பப்படி கூறப்புகின் பலபடியாக விரியுமாகையால், விஜய வாசிரியரை திருக்குறளைப் பொதுவாகத் தக்கோர் வாயிலாகக் கேட்டு, சிறப்பாக 'கடவுள் வாழ்த்து' 'நீத்தார் பெருமை' 'நிலையாமை' 'துறவு' 'மெய்யுணர்தல்' 'அவாவறுத்தல்' முதலிய அதிகாரங்களை நன்கு தெளிந்து தாம் உயர்வாகக் கருதும் உபநிடதங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பிறகு தம் கொள்கையை வெளியிட விரும்புகின்றோம்.

'ஒழுக்கத்து நீத்தார் பெருமை' என்னும் குறள் விஜய வாசிரியரிடம் படும்பாடு பெரிதும் வருந்தத் தக்கதாக விருக்கிறது. இதற்கு இவர் 'ஒழுக்கத்தை நீத்தவர்' என்று பொருள் கொண்டு 'கர்மத்தாலல்ல, ..........துறவால் மட்டுமே அழியாநிலை அடையப்படும் என முரசறையும் உபநிடதத்துடன் ஒப்பிட்டு மகிழ்கின்றார். அந்தோ! இவர்தம் தமிழறிவு இருந்தவாறு! இவ்வுலகில் ஒருவர் கைவிட வேண்டிய பொருள் பலவிருப்பவும் 'ஒழுக்கத்தைக் கைவிட' இவர் விரும்பினது வியப்பே! 'ஒழுக்கத்தைக் கைவிட்டுயர்ந்த துறவிகளை இவர் எக்காலத்து எவ்விடத்துக் கண்டு இவ்வரிய தெளிவு பெற்றன

ரோ வறியேம். ஒழுக்கம் உயிரினும் சிறந்த தென்னும் வள்ளுவர் சொல்லையும் இவரறிந்திலர் போலும். 'ஒழுக்கத்து நீத்தார்' என்பதற்குத் தமக்குரிய ஒழுக்கமுறையில் வாழ்ந்து நீத்தவர் என்ற பொருளை அறியும் ஆற்றலிலர் போலும். இன்னோரை இத்தகையவாராய்ச்சிக்கு உலகம் வேண்டுவதுமுண்டோ?

'தமிழர் நாகரீகத்துக்கு உறைவிடம் திருக்குறளாம்' என்று ஏதோ அவ்வுரையில் தான் ஐயப்படுவதுபோல் எழுதுகின்றார். திருக்குறள் உலகநாகரீகத்துக்கே அடிப்படையாக விளங்கும் பெருநூல்களுள் ஒன்றென்பதை இவர் நன்குணர வேண்டுகின்றோம். 'வீடுபெற நிற்பது தமிழரது நோக்கன்று என்று கருதப்படுகிறது' என்று கூறுகின்றார். யாவர் அவ்வாறு கருதினர்? யாவர் இவரிடம் தெரிவித்தார் என்பது கேட்க விரும்புகின்றோம். இத்தகைய ஒழுங்கற்ற பொய்யுரைகளால் விளையும் கேடுபல வென்பதையும், தப்பெண்ணங்களைப் பரவச் செய்தல் இராமகிருஷ்ணமடம் போன்ற உயரிய கொள்கைகளையுடைய நிலயங்களுக்குப் பொருத்தமன்றென்பதையும், இம்முயற்சியில் ஈடுபடுவோர் மக்களுக்குத் தீமையிழைத்தோரேயாவரென்பதையும், விஜயவாசிரியர் நன்குணர்வாராக.

காமத்துப்பாலை வள்ளுவனார் மொழிந்தது பெருந்தவறென்றும், அது நல்லோரால் பயிலத்தக்க மாண்புடையதன்றென்றும் இவ்வாசிரியர் கூறுவதற்கு இவர் அப்பகுதியைப் பயிலாமையே காரணமாகும். வடநூலில் அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றாய்க் கருதப்படும் 'காமக்கலையையும்' உறுதிப்பொருள் நான்கனுள் ஒன்றாய்ப் பொலியும் 'காமத்துப்பாலையும்' ஒன்றெனக் கருதி மயங்கி வாயில் வந்தது பேசும் அறிவறைபோகிய ஒரு வகுப்பைச் சார்ந்தவர் போலும். காமம் என்ற சொல் இடம் நோக்கிப் பொருள் கொள்ளத்தக்க தென்பதை இவரறிவாராக. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் இன்றியமையாதாகும். கடியத்தக்க காமமும் உண்டு என்பதை வள்ளுவரறியாதாரல்லர்.

> 'காமம் வெகுளி மயக்க மிவை மூன்றி
> னாமங் கெடக்கெடு நோய்'

என்னும் திருக்குறள் காமத்தைக் கடியும் உபநிடதங்களின் கருத்தெல்லாம் தன்னகத்தடக்கி மிளிர்வதை இவர் அறிவாரோ. காமம் என்ற சொல் விருப்பம் என்ற அளவிலே முதற் பொருளுடையதாய், பின்னர் அவ்விருப்பம் செல்லும் பலதிறத்திலும்

இணைந்து பலவாய பொருளைக் கொடுப்பதாகும். பெரும்பான்மையோர் எண்ணுவதொப்ப இழிபொருள் ஒன்றையே குறிக்கவேண்டும் என்ற நியதி ஒன்றுமில்லை. வீட்டின்பம் விரும்பிய இடத்தும் காமம் என்ற சொல் பயன்படுவதுண்டு 'காமபீடம்' என்பதன் பொருள் யாது? மக்கள் விரும்பும் வீட்டின்பத்தைத் தருவது என்ற பொருளுடைமையை யாவரறியார்?

> "வீடுறுமுத்தி போக மென்றவற்றில் வெஃகிய வெஃகியாங்கென்றுங்
> கூடுறுதவத்தால் வழிபடுவோர்க்குக் கொடுத்திடுந்தன்மையாற் காம
> பீட மென்றொருபேர் பெற்றது"

எனவரும் கச்சியப்பர் திருவாக்கை நோக்குக.

உறுதிப் பொருள் நான்கனுள் ஒன்றும் இன்பப் பகுதியைத் தமிழ்ப் பெரியாரைத் தவிர்த்து வேறு எவரும் சீரிய நுண்ணிய வகையில் எடுத்தோதாதினலேதான், தமிழறிவு வாய்க்கப் பெறுத பிறரெல்லாம் 'காமம்' என்ற பெயர் கேட்டவளவில் வெளிப்படையாகத் தம் வெறுப்பைக் காட்டி, தங்களைப் பிறர் பெரியோராக எண்ணிக் கொள்ளவேண்டி, போலிவுரைகள் பல பிதற்றுகின்றனர். திருக்குறளின் காமத்துப்பால், உலகநூல்களுள்ளேயே ஒரு சீரிய தகுதி வாய்க்கப் பெற்றுள்ளதென்பதை நல்லறிவு வாய்ந்து அப்பகுதியைப் பயின்றுரனைவரும் நன்குணர்வாராகலின் யாம் அதிகம் எழுதமுற்பட்டிலம். ஆண்டவனேடு அடியான் கொண்ட உறவும் தலைவன் தலைவி நிலையில் பேசப்படுமாயின் அச்சீரிய இன்பத்தை என்னென்று சொல்வேம். அழுதடியடைந்த எம் அப்பராம் துறவறவேறு "காதன் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்" எனக் கூறி அக்கூட்டத்து, தாம் கண்டது "கண்டேனவர் திருப்பாதம்' என இறைவன் திருவடியே எனக் கூறுவாராயின், தூய இன்பத்தின் உயர்வு யாம் கூறும் தகைத்தோ!

திருக்குறள் அமைப்பினும் உபநிடத அமைப்பு மேம்பட்டது எனக்கூற முன்வந்த விஜயவாசிரியர், உபநிடதங்கள் முறையாகவும் ஒழுங்காகவும் அமைக்கப் பெற்றனவல்ல எனக் கூறுகின்ருர். உலகமுழுதும் உபநிடதங்களை ஒழுங்குபடுத்தப் பெற்ற தத்துவம் எனக் கூற இவர் இவ்வாறு கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. வினு விடைகளாலும், கதைகள் வழியாகவும் உண்மையைக் கூற முன்வந்துள்ள

பெருநூல்களை, மெய்ப் பொருளைக் கண்டவாறு அம்மேலோர் மொழிவாராயினர் எனக் கூறுதல் பொய்யுரையேயாம். தாம் கண்ட உண்மைப் பொருளை உலகறிந்துய்ய ஒழுங்குபடுத்திப் பேரருளுடன், வள்ளுவனாரொப்ப வெளியிட்டவர்களேயாவர் உபநிடதங்களருளிய முனிவர்களும் என்பதே பொருத்தமாகும். ஒழுங்குபடுத்தி வெளியிட்ட முறையில் வள்ளுவனாரது சிறப்பு முனிவர்களுக்குப் பொருந்தாது போய்விடும் என்ற அச்சமோ, ஐயமோ, இவ்வாசிரியரை இவ்வாறு பிறழ எழுதி முனிவர்களுக்கு உயர்வு கற்பிக்கச் செய்திருக்கவேண்டுமென எண்ணுகின்றோம். உயர்ந்தவர்கள் எக்காலத்தும் உயர்ந்தவர்களேயாவார். இதற்காக இவ்வாசிரியர் பாடுபடவேண்டாம். உலகத்தில் உயர்ந்த பெரியோர்களை ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுப் பார்த்து உயர்வு தாழ்வு கற்பிப்பது பேதமையோடு தீவினையாகுமென்பதையும், உயர்ந்தோரெல்லாம் வேற்றுமையின்றி நன்மக்களால் போற்றத்தக்கவர்களேயென்பதையும், தமிழுலகம் நன்கறியுமாகலின் யாம் அதிகங் கூறவேண்டுவதில்லை. ஒவ்வொரு அதிகாரமும் பத்துக்குறளால் அமைக்கப் பெற்றுள்ள காரணத்தை ஆராய்ச்சி செய்யப்புகுந்த இவ்விஜயவாசிரியர் தம் நூற்பயிற்சியின்மையையே நன்கு தெரிவிக்கின்றாராகலின், ஒவ்வொரு குறளும், ஒவ்வொரு குறளின் ஒவ்வொரு சொல்லும் இன்றியமையாதனவென்பதையும், அவ்வுண்மை முழுநூலாகப்பார்த்துப் பயிலுங்கால் தெரியக்கூடிய தென்பதையும் அவர் அறியவேண்டுகின்றோம். இவர்தம் பேதையறிவோ வள்ளுவனார் பேரறிவைப் பார்க்கவல்லது. இத்தகைய பகுதிகளைக் காணுந்தொறும் 'அரமகளிரடிவைக்க நாணுமரங்கிற் பேய்க்கணம் பெருமிதக் கூத்தாடத் தொடங்குவதொக்கும்' என்னும் ஓர் ஆங்கிலப் பழமொழி நினைவுக்கு வருகின்றது. பலவாய் விரிந்த பொருளைப் பத்து என்னும் எண்ணில் வள்ளுவனார் ஏன் அடக்க வேண்டும் என வினவுகின்றார்க்கு, பலவாய் விரிந்த உபநிடதங்களுள் பத்தைமட்டும் ஏன் தனித்துயர்த்த வேண்டுமென்பதே விடையாகும். இறுதியாக, திருக்குறளைத் தாழ்த்தி அதனால் உபநிடதங்களுக்கு உயர்வுகூறவேண்டுமென வெண்ணிய விஜயவாசிரியர், எவ்வாறோ திருக்குறளின் உண்மை உயர்வில் ஈடுபட்டு, தன்னை மறந்து 'உபநிடதங்களை உலகுக்கு அளித்த ரிஷிகளோடு திருவள்ளுவர் சம அந்தஸ்த்துப் பெறுகிறார் என்பதைக்கடவுள் வாழ்த்து என்னும் முதல் அதிகாரமே காட்டிவிடுகின்றது' என ஒப்புக்கொண்டுவிடுகிறார், 'வீட்டைப்பற்றி வள்ளுவர் தம்

உள்ளத்தைச் செலுத்தியிருப்பாராயின் குறளானது உபநிடதங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுத் தவசிகளது உள்ளத்தில் ஒப்பற்ற ஸ்தானமொன்றை எய்தியிருக்கும்' என்று கூறுகிறார். திருக்குறள் அடியார்களது உள்ளத்தில் வேரூன்றி நிற்கின்றதென்பதை முன்னர் திருவாசகத்தின் ஒன்றிரண்டு செய்யுள்களால் விளக்கினோம். இன்னும் அம்முறையில் பல எடுத்துக் காட்டக் கூடுமெனினும் விரிவஞ்சி விடுக்கின்றோம். வேதமுதல் இதுகாறுமெழுந்துள்ள வீட்டியல்புகூறும் நூல்களின் உயரிய முடிவெல்லாம் திருக்குறளில் அடங்கியுள்ளமை கற்றவர் நன்குணர்வார். பயனற்ற மயக்கவுரை பலவற்றால் வீட்டைக் கூறாது, மக்கள் தெளிந்துய்ய வேண்டிய வகையில் பலபடிகளுக்கு மேற்பக் கூறியுள்ளமையினாலேயன்றோ பெரியோர் திருக்குறளைக் கற்று 'வீடு தெளிந்தோம்' எனக் கூறுவாராயினர். வீட்டினியல்பு நன்குரைத்து ஆன்றோருள்ளத்து ஒப்பற்ற நிலை பெற்றிருப்பினும்—விஜயவாசிரியரின் அநுமதியின்றியே—திருக்குறள் உபநிடதங்களை உதறித்தள்ளவேண்டுமென்று யாம் விரும்பவில்லை. மாறுபட்ட பலவுணர்ச்சிகளும் மலிந்த இக்காலத்து, திருக்குறளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாக முன்வந்து பிழைபல பிதற்றும் பேதைமையைத் தமிழறிஞர் புறக்கணித்து, பொருள் செய்யாது வாளாவிருத்தல் அவர் தம் தகுதிக்கு ஏற்புடைத்தே யெனினும் இத்தகைய போலி ஆராய்ச்சி மக்களுக்கும் அறிவு வளர்ச்சிக்கும், உண்மைக்கும் சிறுகச்சிறுக பிரறியாது தீங்கிழைக்கப் புகுமாகலின், இதன் அறியாமையும், பிழையையும் தமிழ்மக்களுணர்ந்து, இத்தகைய போலியாராய்ச்சியைப் புறக்கணிக்கவும், விஜயவாசிரியர் தம் அறியாமையை உணர்ந்து திருத்திக்கொள்ளவும் பயன்படுமாறு இம் மறுப்புரை எழுதப்பட்டதேயன்றி, இப்போலியாராய்ச்சியால் திருவள்ளுவர் பெருமை குறைந்துவிடும் என்ற அச்சத்தாலல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தமிழ் மக்கள் தம் அரும்பெறல் நிதியமாகிய திருக்குறளைப் பலகாலும் கற்றுப்பயனடைந்து அதன் பெருமையைத் தங்கள் உளத்தாலும் சொல்லாலும் செயலாலும் நிலைநாட்டி உலகத்தின் அருட்பொதுநிதி மேலோங்கும் வண்ணம் வள்ளுவர் பெருமையை உலகறியச் செய்யவேண்டுகின்றோம்.

---

௨

# வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 9, பக்கம் 354)

## இயல்-௨ காட்சி-௫.

உறுப்பினர் :—விறலி ; பாணன் ; கபிலர்

இடம் :—காட்டிடைவழி

பொழுது :—நண்பகல்

[பரிசுநாடும் பாணனிடம் கபிலர் மலையனின் கோடைவளங்கூறல்.]

விறலி :—எனக்கினிய ! காரிவேந்தர் எவரும் பெறாத பேற்றை இவ்வையகத்தே யடைந்திருப்பினும் அதற்குரிய துணையா யமைந்தது இப்பெண்ணையாற்றின் பெருவளமே யன்றோ? இவ்வளன் சுருங்கின் அவர்தம் கொடை என்னும்?

திங்கட்குடையான் செங்கோலான் செவ்விதிருக்கோ வன்மலையான்
செங்கட்செருநர் உழுநர்மணி முழவம்விழவு மதகுடைநீர்
தங்கும்ஓதை சிறந்தார்ப்பத் தவழ்ந்தீங்கொழுகுந் தமிழ்ப்பெண்ணை
இங்கும்நல்கா தாயிடினும் இரவோர்க்கில்லை யென்பானோ?

பாணன் :—

இல்லையென்ப தறிகில்லான் இம்மையம்மை யெம்மையினும்
இல்லையென்று சொல்லுமவன் ஏதிலார்பால் அவர்வெற்றி
இல்லையில்லை யெஞ்ஞான்றும் இவனைப்பணிவார்க் கின்னல்தான்
இல்லையெங்கண் மலையற்கே யீடிங்கெவரு மில்லையே.

நல்லாய் ! உலகம் வரினும் வழங்கக் குறைபடாக் கொடை நலம் பெற்றவரன்றோ எம் காரி. எத்தகைய நிலைவரினும் எம்மண்ணலார் பரிசிலர்க்கு இல்லையென்பதறியார்.

**விறலி** :—என்தோழ! இனி எவ்வளவு நாழிகைத் தொலேவு யாம் நடக்கவேண்டும்? வேனிற்கொடுமை மிகுகின்றது; உடல் நலியத் தலைப்படுகின்றது; கால்களும் சிறிது தள்ளாடுகின்றன. என்ருலும் மலையமன்னர்மேற் கொண்டுள்ள எனது அவா, இத் துணையும் பொருட்படுத்தாதுளது. வாழிய, அவன் திருஆட்சி!

**பாணன்** :—அன்புடையாய்! நிற்குற்ற களைப்பு நீங்க இவண் சிறிது தங்கிச் செல்வோம். இற்றைய மாலைக்குள் யாம் வள்ளல் காரியைக் காணுதல் கூடும்; உளந்தளரற்க. [விறலியுடனமர்தல்] தோழி! நம் வேந்தர் திருமுன்னர் இசைத் தற்குற்ற பண்களை ஈண்டு ஒருமுறை பாடித் தெளிவுறுவோமாயின் நன்ரும்.

**விறலி** :—அவ்வாறே ஆகுக, பாண!

பண்

திருவளாணிவாயில் திணிமதில்திகழ்கொடி மாடமல்கும்
செருவில்சீர்ப்பறையொலி முரசொலிசிலம்பொலி முழங்கவைகும்
மருமலர்ப்பொழில்மன்னு மணிமுத்துப்பெண்ணைசேர் மலேயன் கோவல்
இருநிலமடந்தைதன் திருநுதலணிதரும் திலகமன்றே.

பண்

நீருண்ட மாமழையே! நிலவுதரும் வெண்டிங்காள்!
சீருண்ட பொதிகைமணம் சேர்ந்தூரும் தமிழ்த்தென்ருல்!
கூருண்ட வேல்மலேயன் கொடைமடங்கைக் கொண்டமைபோல்
யாருண்டிவ் வுலகமதி லெமக்குணர்த்த வல்லீரோ?

பண்

பூவன் முகுந்தன் பேயன் போன்றிங்
காவன் அறிவால் அழகால் திறனல்
மூவர் புகழ முளைத்தா னன்னன்
மாவண் காரி மற்றூ ணிலனே.

பண்

யாழையிடமாத்தழுவி யாண்டுநலங் கூடவிசை பாடுமுறையேம்
ஏழைசிறுபாணர்தம தேவன்மகட் கூத்துவக்கு மெளிதீதென்னே
மாழைநெடுந்தேர்களிரு டேனைநிதி சோவருண் மாரிமலேயன்
வாழையிளநீர்கமுகு சூழ்பழனக் கோவனகர் வாழ்வானம்மா

பாணன் :—(புடைநோக்கித்திடுக்கிட்டெழுந்து) பொய்ந்நெறியறியாப் புலவர்பெரும! எம்பால் தாங்களணுகினமையை யறிந்திலேம், பொறுத்தருள்க. விறலி! இப்பெருமான், நாம் நாடிச்செலும் திருக்கோவலூரின் மலையமான் திருமுடிக்காரி மன்னரது அன்பிற்குரிய கபிலர் பெருமானாகும்.

விறலி :—(அடிவணங்கி எழுந்து) மறைத்திருவாள! எனது கண்குளிரத் தங்கள் திருமேனியைக் கண்டு களித்தற்குற்ற இந்நாள் எனக்குற்ற ஒருபொன்னுளாகும். பெரும! தங்களது அருணோக்கம் எங்கள்பாலமைவதாகுக.

கபிலர் :—இசைத்தமிழ் மக்காள்! நீவிர் சிறிதுமுன் இசைத்த இனிய பண்களாலீர்ப்புண்டு இவண்போந்து மகிழ்வெய்தினேன். உங்களது இசைநலந்தழுவிய பண் மலையன் காரியை மகிழ்வூட்டும்; உங்களுளம்பொருந்த வேண்டுவன தருவன். மேலும், அவன் எவருந் பெறுத கொடைச்சிறப்புடையான்; ஆதலால், "நன்னுளல்லாது போகியும் வழியிடையில் பறவைகளால் தீநிமித்தந் தோன்றித் தடுப்பவும் ஏற்றபொழுதல்லாதிருந்தும் வலியச்சென்று நலனீங்கிய மொழிகளைச்சொல்லியும் இவற்றுல் உளமுடையாது, காரியையணுகி, முறைபெற்ற இசையோடொலிக்கும் அருவியுள்ள பெருமைமிக்க மலையுடைய அவனைப்புகழ்ந்து பாடுவாராயின், எவரும் பரிசுபெறுது, வறிதே மீள்வாரல்லர்." இவன் போன்றுரை இவ்வுலகில் எங்கணுங்காண்பதரிது.

பாணன் :—அருண்மொழி அந்தண! தங்கண் மொழிகளால் என்தோழி ஐயம் நீங்கினள். யாண்டும் இம்மலையனின் கொடைவளத்தைக்குறிக்குங்கால், 'கருவில் திருவாகப் பெற்றுளான்' என மொழிகின்றனர். அதற்குச் சான்றாகத் தங்களது திருமொழியும் வந்தது.

கபிலர் :—யாழ் தழூஉம் பாண! இவ்வையத்துறையும் ஏனைப்புரவலர்க்கும் எம்மலையற்கும் கொடைமுறையால் வேறுபாடுண்டு. அஃதாவது, "அன்று சேமித்த இனிய மதுவுண்டு நாண்மங்கலப் பெருமகிழ்வால் களிப்புறுங்கால் எவர்க்கும் தேர்க்கொடைவழங்குதல் எளிது. அவ்வாறு களிப்புறுத போது, அழியாப்புகழால் விளங்கும் மலையன், பரிசிலர்க்கு நல்கிய அணிகளால் மிளிரும் உயர்ந்த தேர்கள், பயன்மிக்க முள்ளூர் மலைமேலுண்டாய மழைத்துளியினும் பலவாயின."

எனவே, எம்காரிமன்னன்என்றும் எந்நிலையினும் ஈவதே கடனாக் கொண்டவனாதலால் அவன் வள்ளன்மை ஏனையரதுபோல செயற்கையுட்படாது இயற்கைநிலை பெற்றுளது.

**பாணன்:**—கல்விக்காவல! தங்களது அன்புக்கு யாங்கள் என்ன கைம்மாறு செய்பவல்லேம். பரிசு நாடிய எமக்கு இனிய நல்லாறுகள் பல நவின்ற தங்களது இணையடி மலர்களை எமது நெஞ்சத்துட்பதித்து மகிழ்வதன்றிப் பிறிதொன்று மறிகிலேம். வாழ்க பெரியோய்! வாழ்க நின் அருண்முறை!

**கபிலர்:**—நல்லிசைச் செல்வர்காள்! மலையன்காரிபாற் சென்று இறைவனருளால் இன்பமெய்துக. பொழுது நீங்கு முன் கோவலூர் அடையலாகும். மகிழ்வுடன் சென்றுவருக. நான் போய்வருகின்றேன். **(இருவரும் தொழ — கபிலர் கைகளை உயர்த்தி வாழ்த்துதல்.)**

காட்சி முடிவு.

# இயல்-ரு காட்சி-க.

உறுப்பினர் :—அதியமான் நெடுமானஞ்சி ; அணிமுதல்வன்-கருணாகரத்தேவன் ; புலவர்-பொன்முடியார்

இடம் :—தகடூர் அதியன் கோயில்

பொழுது :—முற்பகல்

[மலையமான் காரியை வெல்ல அதியமான் அஞ்சி உளங்கொள்ளல்]

அதியமான் :—கருணாகர ! என்னே, அவன்றன் இறுமாப்பு? நீரளவே ஒரு குளத்தின் ஆம்பல் அமைகிறது. நறுந்தேன் பெய்து வளர்த்தாலும் கைப்பினின்றும் பேய்ச்சுரை மாறுவ தின்று, புன்புலாலைப்புறம் பொதிந்து மூடினும் தன் தீநாற்றத்தால் தொலைவினர்க்கு அது துன்பந்தராதிருப்பதில்லை. மழவர் படைஞ! அவனைப்பற்றியநின் குறிப்பியாது?

கருணாகரன் :—பெரும! என்கருத்து தங்கட்குமாறாய தன்று. தங்களாணைவழிப் படிந்து நிற்பதுவே அஃதாம். ஒற்றன் ஒளிமுத்தன் வழியே முள்ளூர் மலையனின் திறன்கள் யாவும் தெரிந்துள்ளேன். சோழன் இராசசூயம் வேட்டகிள்ளி, தனக்குப் படைத்துணையாயமைக்காகத் தந்த திருமுடிப்பரிசும், பிற இருமன்னவரால் வழங்கப்பெற்ற கொடைச்செல்வங்களும் அவன்றன் நிலைமையைத் தடுமாறச் செய்கின்றன. போர்த்திற னில்லா மூவர் மயங்கப்பொருவலிபெற்றமையால், தன்னிகர் எவருமிலர் என இறுமாந்துமுள்ளான்.

அதியமான் :—(சினந்து விழித்து) அறிந்தேன்! அறிந்தேன்!! தம் முன்னோர் திறனில் ஒருதினையளவும் பெறாத அம் மூவர் பால் பெற்ற பரிசு, இவ்வையகமே முனைந்துவரினும் அதனை முறித்து வாகைசூடும் வலிமைபெற்ற வீரருள் வீரர் யாவரை யும் இகழ்வுபடுத்துமோ? தனக்கு நிகர் எவருமிலரென இகழ்ந்துரைக்கவோ அப்பரிசு வந்தது? நன்று, அவன் சிறுமதி! உண்மை வீரன்: வெற்றியே என்றுங் காண்பவன்: தன் போன்றாரைப் போரிற் புறமுதுகிட்டாலன்றி 'நிகரற்றவன்' என மொழியக்கூசுவன். (மேனோக்கி) 'அறிவிலீ! என்னைப் பகைத்துள்ள நின் நா, 'நிகரற்றவன்' என எவ்வாறு கூறத் துணிந்தது? நின் இறுமாப்பை அதியன் கடிதிற் போக்கு

வன்; மழவர் படையின் மாண்புணர்ந்தபின்னன்றே நின் மடமை நீங்கும்.' (புறம்நோக்கி) கருணாகர! கோவனகர் முற்றுகைக்குத் திட்டம் செய்க! முளையிற்களையாவிடில் முற்றியபின் கோடரி கொண்டு முறிக்கநேரிடும். விரைவில் ஆவன அமைத்து, விளம்புக.

கருணாகரன்:—அவ்வாறே அமைக்கின்றேன், பெரும! திட்டம் செய்தபின் ஆட்போக்குவேன். வணக்கம்! சென்று வருகின்றேன் (பணிந்து நீங்குதல்).

பொன்முடியார்:—எழில்மலி பொழிலிடைக் குயில் மிகப் பயிலும் தகடூர் வேந்தே! இத்தமிழகத்தே இன்று நின்னைப் போரில் வெல்லுவார் எவரும் இலர் என்பதும், நின்னையொத்த பிற தகுதிகளான் மேம்பட்டார் பிறரிலர் என்பதும் எவரு மறிந்த செய்தியே. எனினும், மூவேந்தர்கள் மகிழ்ந்து மலையனைச் சிறப்பித்தமை, நின்மீதுற்ற அழுக்காற்றினாலன்று: அவன் பாற்கொண்ட அன்பினாலேயாம். இவ்வாறிருக்க, நாவடக்க மின்றி நின்பாலிழுக்குத் தோன்ற அம்மலையமான் கூறினனாயின் அஃது எவராயினும் வெறுக்கத்தக்கதே. மற்றும், நீயோ, முன் வைத்தகாலைப் பின்னிடக் கூசுவாய் என்பதும், நாளும் கோளும் நன்னிமித்தமும் பொருத்தமின்றியிருப்பினும் ஆன்றோர் நின்பா லணுகி, 'நின் வெற்றி ஐயுறுமாறுளது, செல்லற்க' எனக் கூறித் தடுப்பினும் அவற்றிற்கு மாறாக, நீ போர் முகத்து நின்று மாற்றலரைக் கூற்றுவற்காக்கி, வெற்றிவாகை சூடுகின்றாய் என்றவுண்மையை யாமறிவேமாதலால், நீ, மலையன்பாற்கொண் டுள்ள சீற்றத்தை எம்மனோரால் தணித்தற்காகுமோ?

அதியமான்:—பொன்மொழிப் புலவ! என் நெஞ்சு அவா வும் போர்ச்செயலை வெறுக்கின்றீர்கள் போலும்? எனினும் எனது சிறுமொழிக்குச் சிறிது செவி கொடுக்கவேண்டும். பெரும! தற்பெருமை ஒன்றையே பேசுபவன்பால் என் உள்ளம் செல்லாது: அவனை யிகழவுஞ்செய்யாது; ஆனால், நண்டுகொழுத் தால் வளையிலிருக்க நாடாததுபோல, நாவடக்கமின்றிப் புனை மொழி புகல்வானது இறுமாப்பை எவ்வாற்றானும் ஒழிக்கவே முந்துறும். நாகாவார் சொல்லிழுக்குற்றுச் சோகாப்பர் எனப் பொய்யாமொழி நவில்கின்றதே. என்போன்றார், 'அஃதெனக் கின்று' என இன்று கூறினால், பகைக்கும் போர்க்கும் அஞ்சி அமைதி வாழ்வு நாடும் வலியிலார்நிலை நாளை யாதாகும்? நாட்டி னது பொதுநலம் பேணு முறையிலாவது கயவரை ஒறுத்தல் என்போன்றாரின் கடனாகுமே. பொருள், கலை, உயிர், அழிவு

எனக்கூறி வாய்ப்பறையிடுதல் மழவர் மரபிற் கேற்றதன்று. மற்றும் என்னை மதியிலன், ஆண்மை கெட்டவன், தன்னலக் காவலன் என உலகம்பழிக்கும்; அதனைப் பொறுக்க என்னுலியலாது. ஆதலால், கலைஞ! யான் பிறந்தமையால் எனது மரபு ஓங்காவிடினும் அது கீழ்மைநிலை பெறுதவாறுயினும் பேணுவது என் கடமையாகுமென்பதறிக.

பொன்முடியார் :—குதிரைமலை நாட்டுக் கொற்றவ! நின் கருத்து சாலச் சிறந்தது; அஃது ஆண்மையாளரிடமே அமைவது. பொருந! போர் எனும்போதே என்நெஞ்சு துடிக்கின்றது; அஃது ஆற்றலின்மையாலன்று. இருவர்பாலேற்பட்ட சிறு பிணக்கு, போரின் வழியே தொழிற்படுங்கால் அதனுல் அழிக்கப்படும் ஆண்மையாளர்தம் நல்லுயிர்கள் எத்தனை: அரிதிற் றிரட்டிய அரும்பொருள்கள், அருங்கலைகள் எத்தனை, யெத்தனை? அறிவுநிரம்பியவிடத்தன்றோ பிறரது அழுக்காறும் பகையும் அல்லற்படுத்துகின்றன. ஆதலால், நம் ஆழ்ந்தகன்ற அறிவின் விளக்கத்தால், அல்லனகடிந்து, பழிபெறுவாழ்க்கையால் நல்லனஓம்பி, இனிய நல்லாறுகளால் இஞ்ஞாலத்தவரது நல்வாழ்வைப் பெருக்கவேண்டுமேயன்றி உடல்வலித் திறத்தால்அன்று, என்பதே என் கருத்தாம்.

அதியமான் :—மதிநிறைபுலவ! தங்கள் கருத்து என்பால் மாறுபடுகின்றது. ஏனெனில், புலவர்தம் வாய்மொழிக்கேற்ப வேண்டுவன யாவுமியற்றியும் பயன் பெற்றிலனே! இன்சொல், பணிவு, ஒற்றுமை இவற்றை வெறுப்பவன்பால் நம் கடமையென்னை? காஞ்சிக்காவலன் என்பாற்கொண்ட வெறுப்பைத் தூதுமுறையால் நீக்கி அவனை என் நண்பனுக் கொண்டமை இந்நாடு உணருமே. இவன்பால் என் முயற்சி பயனின்மை பயந்தமையால் இன்று அவனைப் போர்முனையிற்காணும் நிலை ஏற்படுகிறது.

பொன்முடியார் :—அஞ்சா நெஞ்சுகொள் அஞ்சி மன்ன! நினது உரம்பெற்ற நெஞ்சாண்மையைக் கண்டு மகிழ்கின்றேன். அறப்போர் தொடுக்கும் நின் திறம் போற்றற்குரியது. நின் மாற்றலரைப் போரிற் புறமுதுகிட்டு, உலகுயிர் அனைத்தையுங் காக்கும் அன்னையை நிகர்ப்ப அருணலம்பெற்று மகிழ்க! வாழ்க நின் செங்கோல்! வீழ்க நின் பகைஞர்! ஓங்குக நந்தமிழகம்!

காட்சி முடிவு.

உ

# புதுவீடு புகுதல்

திரு. கு. நா. சுந்தரேசன், கணக்காயர், பிரகம்புரம், (கஞ்சம்)

### தரவு

நெடுவழி நடந்தோய்ந்து நெஞ்சுளைந்து வியர்சிந்தப்
படுக்கைக்கும் இருக்கைக்கும் பாரிலே இடமறியேன் !
ஒடுங்குகூடு முதுகேற்றி உலகஞ்சி மெலிந்தூரும்
நகுதக்க நத்தைபோல் நசைவீடு மனந்தாங்கித்
தருவீடிங் கொன்றுபெறின் தகைசிறந் துய்வலெனப்
புகுதரநின் படிநின்றேன், புகலாயோ சிறுகுடிலே?

### தாழிசை

வழியோரம் இல்லிலேன் யான்வளர்த்த பூங்கொடிகள்
கழிந்துலைய ஊர்திகளும் காலிகளும் விழுங்குமால் !
எழிற்றெருடையொ டிறைவனையான் காலைதொறுந் தொழு
[தேத்தக்
கொழுகொம்புப் பந்தரையும் பாத்தியையும் உடையையோ?

புயலாலும் காற்றாலும் பொழிவாலும் நனைந்தசைந்து
வெயிலிலே ஒளிகுன்றி விளக்கெனது மழுங்குமால் !
அயல்சூழ்ந்து சீறுவளி அலைத்துழக்கா மணியொளிபோல்
துயலறியா அறையொன்று சோதியார்க் குடையையோ?

ஆவியோம்பும் பணிகளிலே சீட்டெடுக்கும் எனதுபுறு
ஆவணங்கள் திரிந்தோடிச் சிறகலுத்தே அழுங்குமால்
கோவிலெனத் தனிமைதந்து கூட்டினிலே வானின்பம்
ஈவதுபோல் திசையெழுந்த எண்சன்னல் உடையையோ?

இஃதன்றி,
தனிப்பிரிந்த மிகுபழியோ மிகைப்புகழோ விரும்பிலையாய்
இனக்கிளிகள் பசும்பசேல் இலையிடைப்போல், சூழலொடு
நனிபொருந்தி அகப்புறத்தே நாணமொடு விழித்துளையோ?
எனதில்லில் எனுநச்சா மிறுமாப்புத் தோன்றிடினே
மினவிடியைத் தூதழைத்துக் கூரைசுவர் வீழ்த்துதற்காச்
சுனைபொன்றும் அகப்புறத்தே மேகமெழச் சுழித்துளையோ?

உலவாது கலன்நல்கிப் புலவரையும் விருந்தேற்கப்
புலவர்தம் சங்கமாப் பலகைபொத்துன் இடம்விரியக்
குலவாழை அகப்புறத்தே கொழுமைமிகச் செழித்துளையோ
இஃதன்றி,

பிறர்காண உடுத்தபொதுப் பேதையேன், புதைதுகிலில்
உறைந்துமெய் காணேனை உய்விக்கக் கண்ணுடி
இறைத்தூதாய் நின்னகத்தே இடித்துரைக்க ஒளிர்பவோ?
மரங்கொன்று மலைகொன்று திருவுருவு நினக்கீந்த
அரும்பெறற்கு நன்றிகொடு மலைகாடு பொழிற்காட்சிப்
பெரும்படங்கள் நின்னகத்தே பயில்வோர்க்குக் குளிர்பவோ?
நடித்தற்கும் பாடற்கும் படுத்தற்கும் இருத்தற்கும்
படிக்கவுமே, தூங்கிதாங்கி பலகைபேழை காலிகட்டில்
ஒடுங்கிஎங்கும் நின்னகத்தே ஒழுங்கூட்ட மிளிர்பவோ?
இனையையாயின்,

சுரிதகம்

'சிறியை போதி நீ' என்றனை யிகழேன்.
நறுமாத் தோரணச் சரண்மனை பென்பேன்,
செக்கரும், காலையும், கதிரோன் பொன்னெளி
மிக்கிருட் பால்நிலாத் தீட்டுவெண் சுதையும்
பொறப்ப, பொன்மகள் மாடமும்
நாமகள் கோயிலும் ஒருங்கென நயந்தே.

---

## புத்தக மதிப்புரை.

---

**மலரும் மாலையும் :—**

இது தீந்தமிழ்ச்சுவை ததும்பும் இன்னிசைப்பாமாலை. நாஞ்சினாட்டுத் தேரூர்க் கவிஞர் பெருமான் **சி. தேசிகவிநாயகம் பிள்ளை** அவர்களின் உளங்கனிந்த திருப்பாடல். செஞ்சொற் கவியின்பம் நிறைந்த அருங்கலச்செப்பு போன்றது. சொல் லழகும் பொருளழகும் ஒருங்கே மிளிர்வது. பள்ளிச்சிறுர்களும் புலமை மிக்கோரும் சுவைத்து இன்புறற்பாலது.

பிள்ளையவர்களின் அருமைவாய்ந்த திருப்பாடல்களைத் திரட்டி, கண்கவர் வனப்புடன் பதித்துத் தமிழுலகுக்குதவிய **புதுமைப்பதிப்பகத்தாரின்** (3, சாம்பசிவம்தெரு, தியாகராயநகர், சென்னை) நன்றி மாணப்பெரிது. இதன் விலை ரூ. 1—0—0.

# விண்ணப்பம்

அன்பரீர்,

நலம், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய "தமிழ்ப் பொழில்" இறைவன் திருவருளாலும், தமிழன்பர்களின் பேருதவியினாலும் பதினான்காண்டுகளாகத் தமிழ்ப்பணியாற்றி வருகின்றது.

இதன் எதிர்கால வாழ்வு கட்டுரை வழங்குவோர், இதழன்பர்கள் என்னும் இருதிறத்தினராகிய தமிழன்பர்களின் கையி லிருக்கின்றது.

பல அன்பர்கள், எளிய நடையில் எழுதப் பெறவில்லையென்றும், புதுவதான கருத்துக்கள் (Modern thoughts) இதன்கண் வருவதில்லையென்றும் குறைகூறித் தமது பொறுப்பைக் கழிக்கின்றனர்.

குறைந்த எண்ணினரே இதழுறுப்பினரா யிருப்பதால் பொழிலை வளனுறச் செய்தற்கியலாதிருக்கின்றது. ஆண்டு தோறும் கைப்பொருளை இழந்தும் வருகின்றோம். என்றாலும் சங்கத்தார் ஊக்கந் தளராது தமிழ்ப் பொழிலைப் போற்றி வளர்த்து வருவது போற்றத்தகும் செயலாயிருக்கின்றது.

கட்டுரை வழங்குவோர் நினைவில் வைக்கவேண்டிய செய்திகள் சிலவற்றை விளக்க விரும்புகின்றேன்:

1. கட்டுரைகள் தெள்ளத்தெளிந்த தீந்தமிழ்நடையில் விழுமியபொருளை விளக்கமுற எழுதப்பெற்றனவாதல்வேண்டும்.
2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்குமேல் தொடராது கட்டுரை முடிவு பெறவேண்டும். நீண்டபொருளாயிருக்குமாயின் இக்கூறிய அளவில் முடியும் சிறுபிரிவுகளாய் வகுத்து எழுதப்பெறவேண்டும்.
3. தமிழ்ப்பொழிலில் வெளியிடுதற்கனுப்பப்பெறும் கட்டுரை வேறெந்தத் தாளிலும் வெளிவந்திருக்கவும், வெளிவரவும் கூடாது.

இவையன்றி மற்றொரு விண்ணப்பமும் உண்டு.

சிறந்தமுறையில் தமிழ்மொழி, தமிழிலக்கிய இலக்கணம், தமிழ்ப்புலவர் வரலாறு, சுவைமலிந்த தனிப்பாடல்கள், மொழி பெயர்ப்புகள், வெளிவராதிருக்கும் அரிய நூல்கள், கலைப் பொருள்கள், புதிய கருத்துரைகள் இவை போல்வன பிறவும் எழுத வல்லவர்களை எழுதுமாறு ஊக்கவேண்டும்; எமக்கும் அவர்களை அறிமுகப்படுத்தவேண்டும். தத்தமக்குத்தெரிந்த அன்பர்களைப் பொழிலுறுப்பினர்களாகுமாறு தூண்டவும்வேண்டும்.

இவ்வாறான உதவிகள் ஞாலத்தின் மாணப்பெரியனவாய்ச் சங்கத்தாரால் நன்றியுடன் மதிக்கப்பெறும்.

இங்ஙனம்,

பொழிற்றொண்டன், த. வே. உமாமகேசுவரன்,

# தமிழ்ச் செய்திகள்

**கரந்தைத் தமிழ்ச் சங்கம் :**—29-1-39 தேதியன்று சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், வித்துவான். வி. வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் 'கம்பர் கவிநயம்' என்ற பொருள்பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினர்.

3—2—39 தேதியன்று திருவாளர், நீ. கந்தசாமிப்பிள்ளை (M.R.A.S.) அவர்கள் 'இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாத் திறன்' எனும் பொருள்பற்றி சிறந்த சொற்பொழிவு செய்து தைப்பூச நன்னாளைச் சிறப்பித்தனர்.

11—2—39 தேதியன்று திருவாளர், மு. சா. சிவராம பிள்ளை அவர்கள் தாயுமான அடிகளின் வரலாற்றினையும், திருப் பாடல்களின் சிறந்த கருத்துக்களையும் விளக்கி விரிவுரை நிகழ்த் தினர். இக்கூட்டத்தின் முடிவில், சங்கத்தே பேரன்புகொண் டிருந்த அன்பரின் பிரிவு குறித்துக் கீழ்க்காணும் முடிபுகளைச் செய்தனர்.

நமது துயரம் :—"நமது சங்கத்தின் பேரன்பரும், தஞ்சைப் பெருவணிகரும், அருளறத்தைக் கைக் கொண்டொழுகும் சைவத்திருநெறியாளருமாய, திருவாளர், L. S. மாணிக்கம் பிள்ளையவர்கள் நெருநலிரவு இறையடி நீழல் எய்தியமையால் நம் சங்கம் ஓர் அரிய பெரியாரை இழந்து பெரிதும் வருந்து கின்றது"

"நம் வருத்தத்தை அன்னார் திருமக்கட்குத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னார் இன்னுயிர் இறையடி நீழலில் தழைத் தோங்க இறையருளை வேண்டுகின்றது".

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம் :**—மாணவர்கள் ஆசிரியர் களுடன் வதிந்து பயிற்சி பெறுவதால் மாண்புறுவர் எனுங் குறிக்கோளுடன் குருகுலக்கழகமாய் நிறுவப்பெற்றது. தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழ் நாகரிகம் முதலியன ஆக்கம்பெறுதற் குப் பற்றுக்கோடாயிருக்குமெனத் தமிழ்நாடு எதிர்பார்த்திருந் தது. ஆனால் ஆட்சிக் கழகத்தில் இடம்பெறுபவர்களில் பெரும் பாலர் தமிழறிவோ தமிழ்ப்பற்றோ இல்லாதவர்களாய் அமைவ தால் தமிழாக்கம் கேடு பட்டொழிகின்றது. கழகத்தின் துணை வேந்தர், கழகப் பேரவைக்கும், ஆட்சிக் குழுவிற்கும் ஒரு சிலரை நியமுகம் செய்யும் உரிமை கொண்டிருந்தும் தமிழின்பால் அன்பில்லாத பலர் நியமுகம் பெற்றுவருகின்ற னர். இதுபோது அமைந்திருக்கும் ஆட்சிக்குழுவில் தமிழ்ப் புலமையும் தமிழன்பும் ஒருங்கே அமைந்திருப்பார் ஒருவரேனும்

உளரோவென ஐயுறவேண்டிய நிலைவந்துவிட்டது. பிறமொழிகளுள் தாம்கொண்ட மோகத்தால் தமிழுரிமைகட்கு ஏதம் புரிவதே கருமமாயிருக்கின்றது.

தமிழ்நாட்டின் நன்மதிப்பைப் பெற்றுள்ள திருவாளர். கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் (M. A., M. L.) திரு. சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் (B.Sc.Lond.) திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் (M. A. B. L.) ஆகிய பெரும் பேராசிரியர்களைப் பேணிவைத்துக்கொள்ளவேண்டிய கடமையைக் கழகத்தார் உணரமாட்டாது ஏதம் புரிந்தனர்.

வடமொழியில் வித்துவான் தேர்வல்லாது பல சிரோமணித் தேர்வுகளும் ஏற்படுத்தியிருப்பதோடொப்ப, தமிழ்ப்புலவர் தேர்வுகளும் நியமிக்கவேண்டுமெனத் தமிழர்கள் கொணர்ந்த முடிபு மறுத்தொழிக்கப்பெற்றது.

கீழைத்தேயமொழிப்புரவலர் (Dean of the Oriental Faculty) என்ற பதவியில் ஒருமுறை வடமொழிப் பேராசிரியரும், மறுமுறை தமிழ்ப்பேராசிரியருமாக மாறி மாறி இருந்து வரவேண்டுமெனும் நியதி ஏற்பட்டிருக்கவும், அதன்படி இம்முறையில் தமிழ்ப் பேராசிரியர் இப்பதவி எய்தவேண்டியதாயிருக்க அதற்கு மாறாக வடமொழிப் பேராசிரியரே பெறுதற்கானபடி ஏற்பாடுசெய்து தமிழ்ப்பேராசிரியர், தேர்வில் முறியடிக்கப்பெற்றனர்.

கீழைத்தேய மொழிப்புரவலர் (Dean of the Oriental Faculty) எனும் பதவியின் காரணத்தால் ஆட்சிக்கழகத்தில் (Syndicate) இடம்பெற்ற சாத்திரியார், தமிழ்ப்புலமையில்லாதவர்; தமிழ்ப் புலவர்களின் தகுதிகளைத் தாமே மதித்தறிய முடியாதவர். தமிழ்த் தேர்வுக்குழாத்தை (Tamil Board of examiners) அமைக்கவும் தமிழ்ப் பாடக்குழாத்தை (Tamil Board of Studies) அமைக்கவும் தருணம் வாய்க்கும் போது, தமிழ்ப்பேராசிரியரின் கருத்தறிந்து தக்க புலவர்களைத் தேர்ந்து கொள்ளுதல் முறையாகும். அண்மையில் இக்குழாங்கட்குரியவர்களை நியமிக்க நேர்ந்தபோது தமிழ்ப் பேராசிரியர் கருத்தை அறிந்து கொள்ளாது, தமிழ்ப் பேராசிரியர் தாமே குறித்தனுப்பிய மேதக்க புலவர்களையும் புறக்கணித்து, யாரோ ஒரு சிலரை நியமித்துக் கொண்டிருப்பது முறை பிறழ்ந்த செயலாகும்.

இவ்வாறெல்லாம் தமிழர்களின் உரிமைகட்கு ஏதம் புரிந்துவரும் பல்கலைக் கழகத்தின் ஆட்சி முறைகளில் ஒப்புரவின்மை தலைப்பட்டது; சாதி சமயப் பிளவுகள் தோன்றின.

மாணவர்கள், ஒரு குடிமக்களென ஆசிரியன்மார்களால் அன்புடன் வளர்க்கப்பட வேண்டியவர்கள்; இதற்குமாருக உயர்வு தாழ்வுகள் எனும் வேற்றுமை உணர்ச்சி உரங் கொண்டது. ஆட்சித் தலைமையிலிருப்பவர், அன்பும் இரக்கமுங் காட்டாது, கொடுங்கோன்மையால் அடக்கத் தலைப்பட்டனர். கடந்த மார்கழி முதல் இதுகாறும் கழகத்தில் பூசலும், வழக்கும் வளர்ந்து வருகின்றன. மாணவர்களுக்குள் பிளவுகள் உண்டுபண்ணி அவர்களைவென்று அடக்கலாமெனும் நினைப்பை அகற்றி, அன்பும் ஆதரவும் புரிந்து வரம்பு கடந்த செயல்களில் தலைப்பட்ட மாணவர்கள் அனைவரையும் மன்னித்து, அமைதியை விளைவிக்க ஆட்சித்தலைவர் முற்படுவாராக.

## புத்தக மதிப்புரை

ஏழைபடும்பாடு :—

பிரான்சுதேசத்துக் கவிவாணர் விக்தர்யூகோ எனும் புகழ் மிக்க ஆசிரியரின் நூல்களில் சிறந்து மிளிர்வது லேமிசரபிள் (Le miserables) எனும் புனைகதையாகும். துயர்க்கடலுள் ஆழ்ந்து துன்பியலின் எல்லைகாண்பவரின் வாழ்க்கைநிலையை உள்ளபடி சித்திரிக்கும் அருமையிற் சிறந்த நூலாகும்.

விரிந்த நூலாகிய இதனைச் செவ்வனம் பயின்று, அதன் உயிர் நாடிபோன்ற செய்திகளை மெய்ப்பாடு விளங்க, சுவைகள் மலிய, தீந்தமிழ்ச் சுவைமல்க 'ஏழைபடும்பாடு' எனும் பெயரால் வெளிவந்திருக்கும் 'விருந்து' நூல் தமிழிலக்கியத்தை அணி செய்வதாகும். இதன் இனித்த தமிழ்நடை தேனொழுக்குப் போல்வதாகும். படிப்போர் உள்ளத்தைப் பள்ளந்தாழுற புனலென ஈர்த்தோடும் தன்மையதாகும். உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தையும், அறநெறியையும் கற்போர் உள்ளத்தேபதித்து செந்நெறி சேர்க்கும் பான்மையதாகும்.

இன்னோரன்ன சிறப்புகள் மலிய நூல் இயற்றும் திறன் உயர்திரு. சுவாமி. சுத்தானந்த பாரதிகட்கே உரியது. இப்பெரியாரின் இடையறுத் தமிழ்த்தொண்டை தமக்கே ஆக்கிக் கொண்ட பெருமை அன்பு நிலையத்தாருக்கே உரியது.

இவ்வரிய நூலை வெளியிட்டுத் தமிழுலகிற்கு அன்பு நிலையத்தார் உதவுதற்குப் பொருளாலும், செயலாலும் துணைசெய்த இராயவரம் தமிழ்மணி திரு. வை. கோவிந்தன் அவர்கட்குத் தமிழ்நாட்டின் நன்றி உரியதாகும்.

தமிழ் மக்களாவார் அனைவரும் இந்நூலைக் கற்றுப் பயன் கொள்ளும் கடப்பாடுடையார். இதன் விலை ரூ. 1—8—0.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.